Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 06 செவ்வாய்க்கிழமை (20~01~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:55



கிளிநொச்சியிலுள்ள அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான செயலகத்தில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளை ஆராயும் கூட்டம் நேற்று நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வதேசச் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் தமிழ்ச்செல்வன் மற்றும் ஜோய் மகேஸ்வரன்.

# அமைதி முயற்சிக்குத் திரும்புமாறு அரசு மீது அழுத்தம் கொடுங்கள்!

## சர்வதேசச் சமூகப் பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் நேரில் கோரிக்கை

கிளிநொச்சி,ஜனவரி20

**சர்வதேசச் சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலமாக இலங்கை அரசை மீண்டும் சமாதானப் பேச்சுக்குக் கொண்டுவர முயலவேண்டும். அரசை மீளவும் அமைதி முயற்சிகளுக்குக் கொண்டுவரும் வல்லமையும் ஆற்றலும் சர்வதேச சமூகத்துக்கே உண்டு. சமாதானத்தில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்து இலங்கைக்கான உதவிகளை வழங்குவதன் மூலம் அரசு மீது உலக நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும். - இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சர்வதேச சமூகப் பிரதிநிதிகளிடம் நேரில் கோரிக்கை விடுத்தார்.**

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளை ஆராயும் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம பெற்றது. அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்திலேயே அரசு மீது சர்வதேச சமூகம் அழுத்தம் தரவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் உதவி வழங்கும் நாடுகளின் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டமிடல் செயலகத்தில் நேற்றுக் காலை 11.30 மணி முதல் 1.30 மணிவரை இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

இந்தச் செயலகம், யாழ். பல்கலைக்கழக மறைந்த முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்தமாக புலிகளால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மணிவண்ணனின் புதிய படம் மண்டைதீவில் படப்பிடிப்பு!

இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் இயக்கும் திரைப்படத்தின் படப்பிடிப்பு மண்டைதீவுப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வந்துள்ள மணிவண்ணன் கொழும்பில் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

மணிவண்ணனின் அடுத்த திரைப்படம் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு - மண்டைதீவில் எடுக்கப்படவுள்ளது. இத்திரைப்படத்தில் 'அலை பாயுதே' மூலம் அறிமுகமான தென்னிந்திய திரை நட்சத்திரம் மாதவன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். கதாநாயகி தேர்வு இன்னும் முடியவில்லை. படத்தின் முக்கியபாத்திரமான வயதான தாத்தா வேடத்திற்கு யாழ். கலைஞர் ஒருவரே தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

80களில் இலங்கையில் ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலையால் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் ஒன்றரை வயதுள்ள சிறுமி வளர்ந்து பெரியவளான பின்னர் தாயகத்திற்குத் திரும்புகிறாள். அவளது அந்த மீள் பிரவேசத்தில் ஒரு தேடல் இழையோடுவதே முக்கிய கதை. அவளது தாய்மண்ணுக்கும் அவளுக்கும் இடையிலான உறவை மனித வாழ்க்கைக்கே உரிய யதார்த்தமான உணர்ச்சிகளால் வடிப்பதே இப்படத்தின் கதை.

இவற்றுக்குத் தேவையான உப நடிகர்கள் குழாம், கதையம்சத்துக்குத் தேவையான காட்சிச் சூழல், படப்பிடிப்புக்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்படைப் பாதுகாப்புடன் வடமராட்சிக் கடலில் தமிழக மீனவர்?

கொழும்பு,ஜன.20

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகள் சில இந்தியக் கரையோரக் காவற் படகுகளின் பாதுகாப்புடன் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன என்று வடமராட்சி மீனவர்கள், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த இரு தினங்களாக வடமராட்சிக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் 'லம்பாடி' இழுவைப்படகுகளில் வந்து 'தாண்டவல்' வலைகள் மூலம் மீன்பிடித்து வருகின்றனர் எனவும் -

தமிழக மீனவர்களின் படகுகள் நடமாடும் போது இந்தியக்கடலோரக் காவற்படையின் ரோந்துப் படகுகளும் அப்பகுதிக்கு வந்து போவதை அவதானிக்க முடிந்தது என்றும் -

வடமராட்சி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று சு.க.-ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தம்

கொழும்பு,ஜன.20

"இலங்கை அரசியல் வரலாற்றில் மற்றொரு முக்கிய நிகழ்வாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜனதா விமுக்தி பெரமுனையும்(ஜே.வி.பி.) இன்று கூட்டு ஒப்பந்தமொன்றில் வைபவ ரீதியாகக் கையொப்பமிடுகின்றன. காலை 10 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெறும். இரு கட்சிகளினதும் பொதுச் செயலாளர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவர்.

இந்த ஒப்பந்தம் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று சிறுபான்மைக் கட்சிகள் அச்சம் தெரிவிக்கின்றன.

கூட்டு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பின்னர் சு.க. - ஜே.வி.பி கூட்டணி பதவிக்கு வந்ததும் அமுல்படுத்தப்படவிருக்கும் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்படுமென சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. ஆயினும் கூட்டு ஒப்பந்தத்தின் விவரங்கள் இன்று வெளியிடப்படமாட்டா என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்றைய வைபவத்தில் ஸ்ரீல.சு. கட்சி, ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள், பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உட்பட சுமார் 800 பேர் கலந்து கொள்ளவிருக்கின்றனர். தமிழ், முஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யசூஷி அகாஷி இன்று இரவு பிரதமர் ரணிலைச் சந்திப்பார்

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி இன்று இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். நேற்று முற்பகல் அகாஷி கொழும்பை வந்தடைந்தார்.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினால் தடைப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்தப்பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென வழங்கப்படும் உதவிகளைத் தாமதப்படுத்தக் கூடாது என்பதை பிரதமர் ஜப்பானிய விசேட தூதுவரிடம் வலியுறுத்துவார் எனத் தெரிகிறது.

## ஆனந்தசங்கரி யாழ். வந்தார்

யாழ்ப்பாணம்,ஜன.20

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

விமானம் மூலம் பலாலி வந்த ஆனந்தசங்கரி அங்கிருந்து யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்துக்கு வந்தார்.

அங்கு கட்சி ஆதரவாளர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் ஆனந்தசங்கரி, கடந்த வெள்ளிக்கிழமை [illegible]

(14ஆம் பக்கம் [illegible])

## மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் அரசியல் குறித்து ஜனாதிபதி பேச்சு!

கண்டி,ஜன.20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து நீண்டநேரம், உரையாடினார். கெட்டம்பேராதோபவனா ராமய அதிபதியையும் அவர் சந்தித்தார்.

நாட்டின் இன்றைய அரசியல் நெருக்கடி, சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று கையெழுத்திடப்படும் கூட்டு ஒப்பந்தம் ஆகியவை குறித்து மகாநாயக்கர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முயற்சி, பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச்செலவு உயர்வு உட்பட பல பிரச்சினைகள் குறித்து மகாநாயக்கர்கள் ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கினர் என்று பௌத்த பீட வட்டாரங்கள் தெரிவித்தன, இந்த உரையாடலின்போது மத்திய மாகாண ஆளுநர் மொன்டி கொபல்லாவும் உடனிருந்தார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரியின் சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவில் நேற்று வைபவரீதியாக இயக்கிவைக்கப்பட்டது. இது தொடர்பாக நடைபெற்ற விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி சிகிச்சை நிலையத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் - இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் - யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம் சிகிச்சைப் பிரிவில் நடைபெற்ற வைபவத்தில் தலைமை வகித்து உரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோரும் படங்களில் உள்ளனர். *(படங்கள் அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# இரத்த சுத்திகரிப்பு இயந்திர சிகிச்சை யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஆரம்பம்!

யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று வைபவரீதியாக இயங்க வைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சதுர்முகம் தலைமையில் இந்த வைபவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக 'சிவத்தமிழ்ச்செல்வி' கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொண்டார். இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரம் வைக்கப்பட்ட அறையை நாடாவை வெட்டி அவர் திறந்துவைத்தார். நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி க.சிவபாலன், வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா, சத்திர சிகிச்சைநிபுணர் எஸ்.ஜெயரட்ணம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, கண்வைத்திய நிபுணர் க.குகதாசன் மற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து நோயாளி ஒருவருக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் மருத்துவர்கள் சிகிச்சையளித்தனர்.

இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரம் யாழ்.நோயாளர்களின் நீண்ட காலத் தேவையாக இருந்தது. யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பணிப்பாளர் போன்றோரின் வேண்டுகோளை ஏற்று செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன மேற்கொண்ட முயற்சியாலேயே இந்த இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6-15)

# மீனவர் கரைசேர்த்த கொள்கலன் கடற்படையினரால் பறிமுதல்!

வடமராட்சி,ஜன.20

வடமராட்சி சக்கோட்டை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடலில் மிதந்து வந்த 210 லீற்றர் ஒயில் அடங்கிய கொள்கலன் ஒன்றை கரைக்குக் கொண்டுவந்தனர். அப்போது படையினர் மீனவர்களிடமிருந்து அந்தக் கொள்கலனைப் பறிமுதல் செய்துள்ளனர்.

நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடலில் மிதந்து வந்த கொள கலனை மீனவர்கள் கரைக்கு இழுத்து வந்தனர் என்றும் -

அப்போது அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினர் அந்தக் கொள்கலனைப் பறிமுதல் செய்தனர் என்றும் - கூறப்பட்டது.

இது குறித்து வடமராட்சி மீனவர் சங்கத்திற்கு சம்பந்தப்பட்ட மீனவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-173)

## தெஹிவளையில் வர்த்தகர் கொலை!

தெஹிவளை தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளரான கோடீஸ்வர வாத்தகர் டேனியல் சதாசிவம் (வயது 47) என்பவர் கடந்த சனிக்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் பணம் கொடுக்கல், வாங்கல் பிரச்சினை காரணமாக கொல்லப்பட்டிருக்கலாம் என தெஹிவளைப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

வெள்ளவத்தை, தெஹிவளை, கிருலப்பனை போன்ற பகுதிகளில் ஐந்துக்கும் மேற்பட்ட தொலைத் தொடர்பு நிலையங்கள், வெளிநாட்டு விமான ரிக்கற் முகவர் நிலையம் ஆகியவற்றை நடத்தும் டேனியல் சதாசிவத்துக்கு இனந்தெரியாத நபர்கள் அடிக்கடி தொலைபேசி மிரட்டல்களை விடுத்து வந்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தெஹிவளையில் உள்ள அவரது தொலைத்தொடர் நிலையத்தில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இரண்டுபிள்ளைகளின் தந்தையான டேனியல்சதாசிவம் யாழ்ப்பாணத்தில் மரக்காலை வியாபாரத்தில் ஈடுபட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கல்வயல் சடலம் அரச செலவில் அடக்கம்

மட்டுவில் கல்வயல் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் இன்று அரச செலவில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

கடந்த பத்தாம் திகதி காலை துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இந்தச சடலம் சாவகச்சேரிப் பொலீஸாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமைவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இந்தச் சடலம் நேற்று அடக்கம் செய்யப்படவிருந்தபோதும் தொழிலாளர்கள் இல்லாமையால் இன்று பண்ணை மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-7)

### இசைக் கச்சேரி

வழககம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு தமிழக நாதஸ்வரக் கலைஞர்களின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (ஒ-28)

**காணாமற்போனோர் குறித்த வழக்கு:**

# பதில் மனுக்கள் சமர்ப்பிக்க அரசு தரப்புக்கு அவகாசம்

யாழ்ப்பாணம்,ஜன.20

வடபகுதியில் காணமற்போனோர் தொடர்பான வழக்கில் தமது பதில் மனுவைச் சமர்ப்பிப்பதற்கு அரசதரப்பு கால அவகாசம் கோரியுள்ளது.

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் என்று கூறப்படும் கே.புஸ்பராசா( தச்சன்தோப்பு, நாவற்குழி), எஸ்.திருவருட்செல்வன்(கைதடி), சி.சிவகுமார் (நாவற்குழி), பி.ரவீந்திரன்(கைதடி)-

தாமன் ரமேஸ் (நாவற்குழி), மு. ஜெயரட்ணம்(கைதடி), மு.சிவராசா( நாவற்குழி), ஏ.கோடீஸ்வரன் (தனங்களப்பு) ஆகிய எட்டுப்பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

நேற்று யாழ்.மேல்நீதிமன்றத்தில் நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் இந்த மனுக்கள் மீதான விசாரணை இடம்பெற்றது.

காணாமற்போனோர் சார்பாக சட்டத்தரணி எம்.றெமீடியஸ்ும் அரச தரப்பு சார்பாக அரச சட்டத்தரணி கந்தசாமி சுகந்தி, இராணுவ சட்டத்தரணி கப்டன் குறுப்பு ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

அரச சட்டத்தரணி கந்தசாமி சுகந்தி, இவ்வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள அரச தரப்பினர் தமது ஆட்சேபனை மனுக்களை மன்றில் தாக்கல் செய்ய ஒரு மாத கால அவகாசம் வழங்குமாறு கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி வழக்கு விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அதற்குள் ஆட்சேபனை மனுக்களை சமர்ப்பிக்குமாறும் அரசதரப்புக்கு உத்தரவிட்டார்.

இதேசமயம், காணாமற்போன மேலும் எட்டுப் பேர் தொடர்பான மனுக்கள் மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் என்று கூறப்படும் மேலும் ஐந்து நபர்கள் தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்கள் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இந்த மனுத்தாக்கல் நடவடிக்கைக்காக, சுப்பிரமணியம், சுதாகரன்(இல.8, பொன்னம்பலம் வீதி, அரியாலை), பொன்னையா ஜெயராஜ் (நாவற்குழி தெற்கு), சிவகுரு தங்கத்துரை (நாவற்குழி மேற்கு), லோகேஸ்வரன் சேரன் (இல.586, நாவலர் வீதி, அரியாலை), பரமு சந்திரசேகரன்(இல. 32, புதிய வீதி, கொடிகாமம்) ஆகிய காணாமற்போன நபர்களின் உறவினர்கள் அல்லது பாதுகாவலர்களை இன்று காலை யாழ்.மேல் நீதிமன்ற வளாகத்தில் தன்னைச் சந்திக்குமாறு காணாமற்போனோர் சங்கச் செயலாளர் எஸ்.சற்குணம் கேட்டுள்ளார். (ஒ-5)

### நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜன.20

எஸ்.யே.இம்மானுவல் எழுதிய 'இனப்பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்' என்ற நூலின் அறிமுகவிழா நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

யாழ்.பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் நாளை மறுதினம் பிற்பகல் 4.30 மணிக்கு இந்த நூல் அறிமுகவிழா யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ)

# கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.20

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2004 ஆம் கல்வி ஆண்டில் அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்களே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

யசோதா தங்கத்துரை(யாக்கரு, கரவெட்டி கிழக்கு), பாக்கியநாதன் ராஜ்குமார்(நீர்வேலி தெற்கு), வேலும் மயிலும் சுவர்ணா (சமரபாகு), இராஜதுரை இதயராசா (சில்லாலை மேற்கு), பத்மநாதன் பத்மினி(புலோலி தெற்கு), ஹரீந்திரன் சுபாலினி( உயரப்புலம்), மைதிலி மணியம்(நீர்வேலி தெற்கு), செல்லத்துரை ஷகீலா(நீர்வேலி தெற்கு), தில்லைநாதன் வாசுகி (புலோலி வடமேற்கு), ஜேசுதாஸன் றொக்ஸினி(ஆனைக்கோட்டை), கிருஸ்ணன் கிருகன்னி (பருத். வீதி, யாழ்.), யோகதாஸ் கார்த்திகா(வவுனியா), தங்கவேலாயுதம் பிரியதர்ஸினி (பருத்தித்துறை), கனகநாயகம் பவதாரணி (இணுவில் மேற்கு), இரகுநாதன் தயாளினி (ஆனைப்பந்தி, யாழ்.), தனயந்தி பொனனுத்துரை (சங்கானை), சிதம்பரநாதன் மாலதி (கரவெட்டி கிழக்கு), தர்சிகா லோகேந்திரன் (இணுவில் கிழக்கு), துரைராஜா துஷ்யந்தினி (கரவெட்டி தெற்கு), மனோகரன் சைலா (கைதடி நுணாவில்)

சிவராஜா சிவரஞ்சினி (கொடிகாமம்), சொக்கலிங்கம் பிரதீபா(கரவெட்டி கிழக்கு), கந்தசாமி செல்வாநந்தி(உடுவில் தெற்கு), ஆனந்தவேல் வதனி(தொண்டமனாறு), திருச்செல்வம் காயத்திரி (நீர்வேலி தெற்கு), நாகேஸ்வரன் தேவதர்சினி (மாமுனை), ராஜினி கைலாயநாதன் (கட்டுடை), வாசுகி தில்லையம்பலம் (குப்பிளான் தெற்கு), கந்தசாமி மேகலா (நயினாதவு), மகேசன் வனஜா (தும்பளை), யோகராஜா துஸ்யந்தன்( கற்சிலைமடு), மகேந்திரன் குபேந்தினி (கொடிகாமம்), கனகரட்ணம் கௌசிகா (கொழும்புத்துறை), தர்மலிங்கம் தாசன் (சில்லாலை தெற்கு), பரமேஸ்வரன சுரேஷ் (பருத்தித்துறை), சிவபாதசிங்கம் சிவகரன் (இணுவில் கிழக்கு), முகமட் லாபீர் முகமட்றியாஸ் (மூதூர்), இராசையா நந்தகுமார் (ஊரெழு மேற்கு), முகமட் நளீர் முகமட் நுபான் (அழுத்கம), பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் (வரணி வடக்கு).

பஞ்சராஜா சுரேந்திரன்( திருநெல்வேலி), தெய்வேந்திரம் மணிவண்ணன் (பெரியவிளான்), கந்தசாமி சதீஸ்( சரசாலை வடக்கு), முகமட் இப்ராகிம் முகமட் மன்பூஸ் (அட்டாளைச்சேனை), சிவராஜசிங்கம் ஜனார்த்தனன்( புதுக்குடியிருப்பு), பாலசுந்தரமூர்த்தி அரவிந்தன் (இணுவில் கிழக்கு), எஸ். நிர்மலவாசன்(செங்கலடி), ஜெயசுதா இவான் (அராலி வடக்கு), ஏ.அருட்குமரன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), எம்.றொசானி (முருங்கன்),

சி.கஜேந்தினி(புன்னாலைக்கட்டுவன் தெற்கு), ரி.சுரேஸ்குமார் (வல்வெட்டித்துறை), எஸ்.விஜிதன் (அராலி மேற்கு), கே.சாரதாதேவி (தெமொதர), எஸ்.தினேஸ்குமார்(தொல்புரம் கிழக்கு), சிவசுப்பிரமணியம் குருசிவானந்தராஜா (கிளிநொச்சி), ஜெகநாதன் ஜெகரூபன்(புதுக்குடியிருப்பு), கணேசரட்ணம் சசிகாந்த மூர்த்தி (இணுவில் மேற்கு), தவராசா சபேசன் (இணுவில் தெற்கு), ரி.உமாகாந்தன் (கோப்பாய் தெற்கு)

ஆர்.வசீகரன் (நவாலி தெற்கு), ரி.கண்ணன் (குருக்கள் மடம், மட்டு), கே.மதன்ராஜ் (செட்டிக்குளம், வவுனியா), எஸ்ஸ்ரீதர்ஷன் (கோண்டாவில்), எஸ்.நேசராசா (அக்கரைப்பற்று, அம்பாறை), பேரின்பராஜா யசிதா (தாளையடி), விநாயகமூர்த்தி தாட்சாயினி( கொழும்பு), இராமநாதன் மனோதாரிணி (கம்பர்மலை), மனோகரன் ஷோபனா (நல்லூர்), காசிநாதன் சுகாஷினி (புதுக்குடியிருப்பு),

வில்வரா[illegible] ஊர்மிளா (ஈச்சமோட்டை), [illegible]ர்மா சுமித்திரா (இணுவில் கிழக்கு), தவராசா கமலதாஸன் (புதுக்குடியிருப்பு), இராஜரட்ணம் பிருந்தா(அம்பன்), ஜெயபாமினி கிருஷ்ணசாமி (இமையாணன்), சண்முகசுந்தரம், பத்மறோசினி(சிலாபம்), நவரட்ணராஜா சீதாஜினி (இயற்றாலை), இராசேந்திரம் ராஜி (அளவெட்டி வடக்கு), மதனசுந்தரம் அருந்ததி (சிலாபம்), நேசரட்ணம் அன்பரசி( நாகர்கோயில்), செபரட்ணம் அனுசலா (பண்டத்தரிப்பு), அனுசா நவரட்ணம் (இமையாணன்), கனகரட்ணம் ஜெயந்தினி (மிருசுவில்), ஆறுமுகநாதன் லக்ஸிதா (அலம்பில்), கோபாலகிருஷ்ணன் மதனகோபன்(யாழ்ப்பாணம்), துரைசிங்கம், இந்திரஜித்(கந்தரோடை), அல்போன்ஸ், எலிசபெத் (அக்கரைப்பற்று, அம்பாறை), இராமசாமி அங்கேஸ்வரி(வவுனியா), முருகையா சுகிர்தா (மல்லாகம்). கிருஸ்ணன் கியோயினி(ஊரெழு மேற்கு).

செல்வநாயகம் சியாமளா (பண்டத்தரிப்பு), குகநாதன் வசிகுலன்( நாவலர் வீதி, யாழ்.), மனுவல் விஜய நிர்மலா (புத்தளம்), கெங்காதேவன் சசிகலா (நோர்வூட்), ஆனந்தராசா சுகுணா (காங்கேசன்துறை), நவரட்ணம் கிருஸ்ணவேணி(கொக்குட்டிச்சோலை), ஜானகி ஆனந்தராசா(வவுனியா), குணசிங்கம் லெனின்குமார்(நல்லூர்), மரியசேகர் நியோமி கார்த்திகா (மட்டக்களப்பு), பூபாலசிங்கம் ஜிசிதா (ஏழாலை கிழக்கு), அரியநாயகம் அஜந்தமாலா (ஏழாலை கிழக்கு), அன்ரனி லூசியா (மட்டக்களப்பு).

ஜெயராசா ஜெயரூபதி (முள்ளியவளை), கணபதிப்பிள்ளை பரமசிவம் (காரைதீவு), வீரரட்ணம் சந்திரமோகன் (மயிலிட்டி வடக்கு), ஷோபனா ரட்ணசிங்கம் (சங்கானை), கார்த்திகா சிவபுண்ணியம் (சாவகச்சேரி), ஜே[illegible]ன் எடவேட் மேரிமேகலா (பருத்தித்துறை), செல்வநாயகம் லவதுஷா (கந்தர்மடம், யாழ்.), நித்தியானந்தன் கார்த்திகா (இணுவில் மேற்கு).

சகிதா தங்கராசா (முள்ளியவளை), இராசையா ரேணுகா (கோண்டாவில் கிழக்கு), ஜனார்த்தா பூவிலிங்கம் (அச்சுவேலி வடக்கு), ஜெயரட்ணம் ஜயந்தா (தம்பிலுவில், அம்பாறை), தர்மலிங்கம் கஜேந்தினி (மாரீசன கூடல்), ராகவன் விஜிதா (திருகோணமலை), இராசையா உதயசாந்தி (திருகோணமலை), செல்லத்துரை கமலினி (பூநகரி), தம்பிராசா புஷ்பலீலா (அச்செழு வடக்கு).

இராசையா அருள்வதனா (ஏழாலை தெற்கு), ஜெகநாதன் நிரோசா (ஆனைக்கோட்டை), குணரட்ணம் றஜிலா (மாவிட்டபுரம்), கனகரட்ணம் ஜெகரதி (ஒட்டுசுட்டான்), சுந்தரம் தேவதர்சினி (அக்கரைப்பற்று).

வவுனியா, மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் விவரம் தொடர்ந்து வெளிவரும். (எ-து-10)

# பறவைக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது!

தைபே,ஜன.20

தாய்வான், வியட்நாம் ஆகிய நாடுகளில் பரவிவரும் பறவைக் காய்ச்சல் நோய் தீவிரமடைந்துள்ளது. தாய்வானில் மேலும் ஐந்து பேரை இந்நோய் தாக்கியிருக்கிறது.

கோழிகள் மூலமே இந்நோய் பரவுகிறது என்று தெரியவந்ததையடுத்து, அவற்றை அழிக்கும் பணிகள் நடந்து வருகின்றன. எனினும், இந்நோய் தொடர்ந்து பரவி வருவது அங்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சீனாவில் ஏற்பட்ட சார்ஸ் நோயைக கூட சாதாரணமாக்கும் சக்தி கொண்டதுதான் இந்தப் பறவைக் காய்ச்சல நோய் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நோய்க்கு இதுவரை 13 பேர் பலியாகிவிட்டனர். நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'எச்.5என்.2' என்ற வைரஸ் கிருமி கோழிகளைத் தாக்குகிறது. அதனால், கோழி இறைச்சியை உண்ணும் மனிதர்களையும் இந்நோய் தாக்குகிறது என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரஸ் கிருமியை உயர்ந்த வெப்பநிலையில் 20 நிமிடங்கள் வைத்திருந்தால் அது அழிந்து விடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இருப்பினும், இந்நோயின் அச்சம் காரணமாக மேற்படி இரு நாடுகளிலும் உள்ள கோழிகள் பெருமளவில் கொல்லப்பட்டு வருகின்றன. (ஐ)

# எய்ட்ஸ் விழிப்புணர்வு பெண் பிரதிநிதி தென்னாபிரிக்க நீதிபதியால் வல்லுறவு!

## இந்தியாவில் சம்பவம்

மும்பை,ஜன.20

மும்பையில் நடைபெறும் உலக சமுதாய அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த தென்னாபிரிக்க எய்ட்ஸ் விழிப்புணர்வு அமைபபைச் சேர்ந்த பெண் பிரதிநிதியை அதே நாட்டிலிருந்து வந்திருந்த தென்னாபிரிக்க உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடநதது. நீதிபதி கைது செய்யப்பட்டிருககிறார். மும்பையில் உள்ள கொலாபா பகுதியில் அமைந்திருக்கும் பிரபல ஹோட்டலில் இவர்கள் இருவரும் தங்கியிருந்தனர். அப்பெண்ணிடம் நீதிபதி தொடர்ந்து பாலியல் தொல்லைகள் செய்து வந்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் அப்பெண்ணை பலாத்காரம் செய்தார்.

இத்தகவல மும்பை பத்திரிகைகள் மற்றும் சில தொலைக்காட்சி செய்திகளில் வெளியானதை அடுத்து கொலாபா பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து நீதிபதி உடனடியாக மும்பை பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

# பதில் மனு தாக்கல் செய்ய ஜெயலலிதாவுக்கு காலக்கெடு

சொத்துக் குவிப்பு வழக்கிற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதா பெங்களூர் வரும்போது அவருக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று கர்நாடக அரசு மனு தாக்கல் செய்தை யடுதது, இது குறித்து பதில் அளிகக ஜெயலலிதாவுக்கு இந்திய உயர் நீதிமன்றம் இரு வார காலம் அவகாசம் அளித்தது.

பெங்களூரிலிருந்து தன் மீதான வழக்கு விசாரணையை வேறு மாநிலத்திற்கு மாறறக்கோரி முதல்வர் ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இதையடுதது, அவருக்கு முழுப்பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் வழக்கு விசாரணை குறுக்கீடு இல்லாமல் நடைபெறும் என்றும் கர்நாடக அரசு தரப்பில் பதில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், கர்நாடக அரசின் மனுவுக்கு இரு வார காலத்திற்குள் ஜெயலலிதா பதில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ஒ)



பிலிப்பைன்ஸ் நாட்டில் எதிர்வரும் மே மாதம் அதிபர் தேர்தல் நடக்கிறது. இதில் தற்போது அதிபராக இருக்கும் குளோரியா அரோயாவை எதிர்த்துப் பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரபல நடிகை பெர்னாண்டோ போயி ஜூனியர் போட்டியிடுகிறார்.

இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவது அதிபர் குளோரியா அரோயாவுக்கு எளிதல்ல என்று கூறப்படுகிறது. அந்த அளவுக்கு பெர்னாண்டோ போயி தீவிரமாகப் பிரசாரம் செய்துவருகிறார்.

பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று அவர்களுக்கு ஏற்றாற் போல் பேசி, பழகி, நடனமாடி மக்கள் கவனத்தைக் கவர்ந்து வருகிறார்.

அதேபோல் துணை அதிபர் வேட்பாளராக பழங்குடி இனத் தலைவர் செனட்டர் லோர்ன் லிகார்டா என்பவர் போட்டியிடுகிறார்.

இவர்கள் இரண்டு பேரும் பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் பாகியு நகருக்குச் சென்றனர். அங்கு அவர்களுடன் சேர்ந்து நடனமாடுவதைப் படத்தில் காணலாம்.

# டயானாவின் கார் விபத்துக்கு மர்ம வாகனம் காரணமா?

பிரிட்டிஷ் இளவரசி டயானா கார் விபத்தில் பலியானதற்கு மற்றொரு காரே காரணம் என்று புதிய சர்ச்சை கிளம்பியிருக்கின்றது, டயானாவின் கார் விபத்தை நேரில் பார்த்த சவுத்மௌபக் என்ற பெண்ணே இந்த சர்ச்சையை கிளப்பியிருக்கிறார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:- டயானா பயணித்த காருக்கு முன்னே எனது கார் சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென 'பியட்' ரக கார் ஒன்று எனது காருக்கு பினனால் வேகமாக வந்தது. அந்தக் காரை முன்னே செல்ல வழிவிட்டேன். ஆனால், எனது காருடன் அந்தக் கார சமாந்தரமாகவே வந்தது.

அந்தக் காரை செலுத்திய சாரதிக்கு 30 வயது இருக்கும். குள்ளமாகத் தோன்றினார். கறுப்பாக இருநதார். அவர் கார் ஓட்டிய விதத்தை பார்க்கும் போது பைத்தியகாரர் போல் தென்பட்டார்.

அந்தக்காரை முன்னே செல்லும்படி மீண்டும் கூறினேன். ஆனால் அது எனது காருக்கு சமாந்தரமாகவே வந்தது. இதனால், எனது காரை வேகமாகச் செலுத்தி நான் முன்னே சென்றுவிட்டேன்.

அப்போது பின்னால் வந்த கார்களின் 'ரயர்கள்' நிலத்துடன் பலமாக தேயும் ஓசை கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தபோது டயானாவின் மெர்சிடஸ் கார் கட்டுப்பாட்டை இழந்து எனது காரை நோக்கி வந்து கொண்டிருந்தது கண்ணிமைக்கும் நேரத்தில் அது அங்கிருந்த தூணுடன் மோதியது.

பியட் காரை தேடிய போது அது மறைந்துவிட்டது. பியட் காருடன் மோதுவதை தவிர்க்கும் முயற்சியின போதே டயானாவின் கார்ச்சாரதி கட்டுப்பாட்டை இழந்திருப்பார் - என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். விபத்துக்குள்ளான டயானாவின் காரில பியட் கார் மோதியதற்கான அடையாளங்கள் இருந்தன என்று முன்னர் நடந்த விசாரணைகளில் கூறப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் தெரிவித்த தகவலையடுத்து பிரெஞ்ச் பொலீஸார் பியட் கார்களின் உரிமையாளர்களிடம் இரகசிய விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## பிளேயரின் மனைவி எழுதும் சுயசரிதை

லண்டன்,ஜன.20

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் மனைவி செரி, பிளேயருடனான தனது வாழ்க்கை வரலாற்றை சுயசரிதையாக எழுதி வருகிறார்.

'தி கோல்ட் பிஸ் பவுஸ்' என்று அந்த புத்தகத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி வேலைகள் முடிந்துவிட்டன. எதிர்வரும் செப்ரெம்பர் 23ஆம் திகதி இந்தப் புத்தகம் வெளியிடப்படும்.

சட்டத்தரணியான செரி, தனது அனுபவத்தை மட்டுமன்றி, பிளேயருக்கு முன்பு பிரதமர்களாக இருந்தவர்களின் மனைவிகளின் அனுபவஙகளையும் இந்தப்புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இதற்காக இவர் முன்னாள் பிரதமர் ஜோன் மேயரின் மனைவி நர்மாவையும் பேட்டிகண்டு இருக்கிறார். திருமதி தட்சரின் கணவரின் பேட்டியும் இவரின் புத்தகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)




ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினார்கள். ஈராக்கில் இடைக்கால நிர்வாகத்திடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் அமெரிக்காவின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொதுத் தோதல் ஒன்றை நடத்தக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

# மகளின் இரட்டைக் குழந்தைகளை தனது வயிற்றில் சுமக்கும் தாய்!

## லண்டனில் அடுத்த மாதம் பிரசவம் நடக்கும்

லண்டன்,ஜன.20

மகளின் இரட்டைக் குழந்தைகளை தனது வயிற்றில் சுமக்கும் தாய் ஒருவர் அடுத்த மாதம் அந்தக் குழந்தைகளைப் பெற்றெடுக்க இருக்கிறார்.

இந்த விநோதமான பிரசவம் லண்டனில் நடைபெறவிருக்கிறது.

இந்தியாவின் குஜராத் மாநிலம் ஆனந்த் என்ற இடத்தைச் சேர்ந்த 44 வயதுப் பெண் ஒருவர், லண்டனில் தனது கணவருடன் வசித்து வருகிறார். இவரது கர்ப்பபை பாதிக்கப்பட்டதால் சோதனைக குழாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள கணவன் - மனைவி இருவரும் முடிவுசெய்தனர், இதைத் தொடர்ந்து டாக்டரை அணுகினார்கள்.

டாக்டர்கள் கணவரின் உயிர் அணுவையும் மனைவியின் சினை முட்டையையும் சேகரித்து சோதனைக் குழாயில் வைத்து கருவை உருவாக்கினார்கள். சோதனைக் குழாயில் இரண்டு கருக்கள் உருவாகின. அதன் பிறகுதான் பிரச்சினையே ஏற்பட்டது.

குறிப்பிட்ட நாள்கள் ஆனதும் சோதனைக் குழாயில் இருக்கும் கருக்களை ஏதாவது ஒரு பெண்ணின் கருப்பையில் வைத்து குழந்தையை வளர்க்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். எனவே, கணவன் - மனைவி இருவரும் வாடகைத் தாயைத் தேடினார்கள். ஆனால், எவரும் கிடைக்கவில்லை.

வாடகைத் தாயாக இருந்து குழந்தைகளைப் பெற்றுக்கொடுக்க வெள்ளைக்காரப் பெண்கள் அதிக பணம் கேட்டார்கள். இந்தியப் பெண்களை அணுகிய போது வேறொரு ஆணின் குழந்தையை தமது வயிற்றில் சுமப்பதா? என்று கருதி பின்வாங்கிவிட்டனர்.

இதனால், செய்வதறியாது தவித்த அந்தத் தம்பதியினர், தங்கள் பரிதாப நிலையை டாக்டரிடம் தெரிவித்தனர். டாக்டர் இறுதியில் அந்தப் பெண்ணின் தாயாரை அணுகினார். "சோதனைக் குழாயில் வளரும் உங்கள் மகள் - மருமகனின் கருக்களை நீங்கள்தான் உங்கள் வயிற்றில் சுமந்து குழந்தைகளைப் பெற்றுத் தரவேண்டும்" என்று கூறினார்.

அதற்கு அந்தப் பெண்மணி, "எனது பேரக் குழந்தைகளை நானே எப்படி என் வயிற்றில் சுமந்து பெற்றுத் தர முடியும்?"

- என்று கூறி முதலில் கையை விரித்துவிட்டார். என்றாலும், டாக்டர் தனது நம்பிக்கையை கை விட்டுவிடவில்லை. அவரது மகள் மூலம் எடுத்துச்சொல்லி இறுதியில் அந்தப் பெண்மணியை சம்மதிக்க வைத்துவிட்டார்.

"எனது மகளின் சந்தோஷத்துக்காக அவளது குழந்தைகளை நான் எனது வயிற்றில் சுமக்கிறேன்" - என்று கூறிய அந்தப் பெண்மணி தனது சம்மதத்தை தெரிவித்தார். இதற்கு அவரது கணவரும் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து டாக்டர்கள் சோதனைக் குழாயில் இருந்த கருக்களை சத்திரசிகிச்சை மூலம் அந்தப் பெண்மணியின் கர்ப்பப்பைக்குள் வைத்தனர். அடுத்த மாதம் அந்தக் குழந்தைகள் பிறக்கவுள்ளன. (ஐ)

# 'எக்ஸ்ரே' கண்களுடன் அதிசய இளம் பெண்!

லண்டன்,ஜன.20

உடலில் உள் உறுப்புக்களை ஊடுருவிப் பார்க்கும் 'எக்ஸ்ரே' கண்களைக் கொண்ட அதிசயப் பெண் ஒருவர் ரஷ்யாவில் இருப்பது தெரியவந்திருக்கிறது.

இதை முதலில் டாக்டர்கள் நம்பவில்லை. எனினும், தீவிர சோதனைகளுக்குப் பின்பு அவர்களுக்கு நம்பிக்கை வந்துள்ளது. இந்தப் பெண் தனித்திறன் படைத்தவர் என்பதை அவர்கள் ஏற்றுள்ளனர்.

மேற்கு ரஷ்யாவின் சரன்ஸக் நகரில் வசிக்கும் நாதஷா டெம்கினா (வயது 16) என்ற பெண்ணுக்கே, இந்த சக்தி வாய்ந்த கண்கள் உள்ளன.

பத்துவயதாக இருக்கும்போதே, இவரின் கண்களில் 'எக்ஸ்ரே' சக்தி இருப்பது முதன்முதலில் தெரியவநதது. ஆனாலும், அதை அப்போது எவரும் நம்பவில்லை. தற்போது இவரின் கண்களில் சக்தி இருப்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் தன் தாயைப் பார்த்து "அம்மா, உன் உடலுக்குள் இரண்டு போஞ்சிகள், ஒரு தக்காளி மற்றும் தரைச் சுத்தப்படுத்தி (Vacum Cleaner) ஆகியவை இருப்பதை என்னால் பார்க்க முடிகிறது என்று கூறி அவரை அதிர்ச்சியடைய வைத்தாள் நாதஷா. அதாவது இரண்டு சிறுநீரகங்கள், இதயம் குடல் பகுதியையே அவற்றின் பெயர் தெரியாததால் தனக்குத் தெரிந்த பெயரைக் குறிப்பிட்டு அப்படி கூறியிருக்கிறார்.

முதலில் நாதஷாவின் கண்களுக்கு இப்படி 'எக்ஸ்ரே' பார்வை இருப்பதை டாக்டர்களால் நம்பமுடியவில்லை. ஆனால், தீவிர பரிசோதனைகளுக்குப் பிறகு அதுதான் உண்மை என்று தெரியவந்ததும் அவர்கள் வாயடைத்துப் போய்விட்டனர்.

"இயற்கைக்கு மாறான சக்தி இந்த அதிசயப் பெண்ணிடம் இருப்பதைக் கண்டுகொண்டேன்" - என்று இரினாகச்சன் என்ற டாக்டர் கூறியுள்ளார்.

நாதஷா ஒரு நடமாடும் 'மனித எக்ஸ்ரே' என்று மற்றொரு டாக்டர் வியட்டுடன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். நம்மை இந்தப் பெண் முட்டாளாக்க நினைக்கிறாள் என்று முதலில் கருதினோம். ஆனால், உண்மை தெரிந்ததும் அந்தப் பார்வைக்கு இருக்கும் சக்தி பற்றி எங்களால் எப்படி விளக்கிக் கூறுவது என்று புரியவில்லை' - என்றார் அந்த டாக்டர்.

பட்டப்படிப்பு படிக்கத் திட்டமிட்டு இருக்கும் நாதஷா, ஒருமுறை மருத்துவக் கல்லூரி மாணவரின் வயிற்றுப் பகுதியை படமாக வரைந்தார். அப்போது அவர் 'கரும்புள்ளி' வைத்துகாட்டிய இடத்தில், உண்மையில் அவருக்கு 'அல்சர்' இருந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல், பல உதாரணங்கள் சொல்லப்படுகின்றன. அதிநவீன பரிசோதனையில் விடுபட்ட நுண்ணிய தகவல்கள் கூட இவருடைய 'எக்ஸ்ரே' பார்வைக்குத் தப்புவது இல்லை என்றும் தெரியவந்துள்ளது.

தனக்கு இருக்கும் அபூர்வ சக்தி குறித்து நாதஷா கூறுகையில்:-

"புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை எனது கண்களால் சோதனை செய்தேன். ஆனால், உணமையில் அந்தப் பெண் புற்றுநோயினால் பாதிக்கப்படவில்லை. ஒரு கட்டியைப் பார்த்து அது புற்றுநோய்க் கட்டி என்று தவறாக முடிவுகட்டிவிட்டனர் என்பது தெரியவந்தது. ஆனால், என் உடல் பகுதிக்குள் இருப்பதை என்னால் பார்க்க முடியவில்லை. இதில் எனக்கு வருத்தம்தான் - என்றார்.

இப்போது நாதஷா மிகவும் புகழ்பெற்ற பரிசோதனை டாக்டராகத் திகழ்கிறார். தினமும் அவருடைய வீட்டுக்கு முன்னால் பரிசோதனைக்காக நோயாளிகள் நீண்ட வரிசையில் நின்றுகொண்டு இருக்கிறார்கள். சளைககாமல் அவர்களை பரிசோதனை செயயும் நாதஷா கட்டணம் எதுவும் வாஙகாமலேயே இலவச வைத்தியம் செய்துவருகிறார். (ஐ)

# சமூக மாற்றத்துக்கான நிகழ்வுகள் மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்!

## செய்தியாளர் சந்திப்பில் மகளிர் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,ஜன.20

சமூக மாற்றத்துக்கான கலை நிகழ்வுகளை நடத்தி அதன்மூலம் சிறந்த கட்டமைப்புள்ள சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கம்.

- இவ்வாறு கடந்த சனியன்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்



கலந்துகொண்டு விளக்கமளித்த மகளிர் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அருண்நிலா தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் தெரிவித்ததாவது:-

மகளிர் கலைபண்பாட்டுக்கழகம் அமைக்கப்படுவதற்கு உந்துசக்தியாக இருந்து ஊக்கமளித்தவர் எமது தேசியத் தலைவர்தான். அதன் விளைவுதான் இந்த மகளிர் கலைபண்பாட்டுக கழகத்தின் இசைக்குழு. இதனை ஆரம்பிப்பதற்கு இரண்டு வருடங்களாக நாம் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

எமது இசைக்குழுவின் முதலாவது மேடையேற்றம் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி தேசியத் தலைவர் முன்னிலையில் இடம்பெற்றது. இதன்பின்னர், இதுவரை 13 மேடைகளில் இசைநிகழ்ச்சியை நடத்தியுள்ளோம். எமது முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது பார்வையாளர்களின் பாராட்டுதல்கள்தான்.

இதுவரை காலமும் இசைக்குழுகளில் ஆண்கள்தான் எல்லா வாத்தியங்களையும் இசைத்து வந்தார்கள். எனினும், இதற்கு முற்றிலும் மாறாக ஆண்களுக்குச் சமமாக பெண்கள் எமது இசைக்குழுவில் சகல வாத்தியங்களையும் இசைக்கிறார்கள். இது ஒரு வேகமான வளர்ச்சி என்றே நான் கருதுகிறேன். இதுவரை காலமும் பெண்கள் இசைக்குழுக்களில் பாடல்களைத்தான் பாடியிருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் வாத்தியங்களையும் இசைக்கிறார்கள்.

எமது மகளிர் கலைபண்பாட்டுக் கழகம் நெருப்பு நிலவுகள், அலையின் வரிகள், சூரியப் புதல்விகள் ஆகிய ஒலிப்பதிவு நாடாக்களையும் வெளியிட்டுள்ளது. எதிர்காலத்தில் இன்னும் பல ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளோம்.

தமிழரின் விடுதலைப்போராட்டத்தை வலுவுள்ளதாக்க மகளிர் கலை பண பாட்டுக்கழகம் பல மகத்தான பங்களிப்பை வழங்கியிருக்கிறது - என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அரசியல்துறையின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளா கலைவிழியும் கலந்துகொணடார்.

(எ-8)

# கிழக்கு பொங்குதமிழில் பங்கேற்குமாறு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அழைப்பு

மட்டக்களப்பு,ஜன.20

கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தால் நாளை புதன்கிழமை நடத்தப்படவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவின் தலைவரினால் 'பக்ஸ்' மூலம் இருவருக்குமான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும், கடந்த இரண்டு தசாப்தகாலமாக நடைபெற்று வருகின்ற யுத்தத்துக்கு முடிவு கட்டவும் நடைபெற்று வருகின்ற பொங்குதமிழ நிகழ்வு தொடர்பான தமிழ் மக்களின் உணர்வலைகளைப் புரிந்து செயற்படுமாறும் அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை- மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் பொங்குதமிழ் ஏற்பாடுகள் தொடர்பான கூட்டமொன்று அண்மையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.


இதில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன், கடந்த காலங்களை விட அதிகளவிலான மக்களைக் கலந்து கொள்ளச் செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(எ-10)

# ஒளிவிழா நிகழ்வுகள்



குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலையத்தின் ஒளிவிழா நிகழ்வில் யுவதிகள் கிறிஸ்தவ கீதங்கள் இசைப்பதையும், நத்தார்த் தாத்தாக்கள் நடனமாடுவதையும் படத்தில் காணலாம். (எ-150)



தென்னிந்திய திருச்சபையினால் ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் நடத்தப்பட்ட ஒளிவிழா நிகழ்வில், கொக்குவில் தொழிற்பயிற்சி நிலையமொன்றின் யுவதிகள் பாடலிசைப்பதைப் படத்தில் காணலாம். (எ-10)

# ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டும் கொய்யாப்பழம்

சிறுவர்களாலும் பெரியவர்களாலும் விரும்பி உண்ணப்படும் பழவகைகளுள் கொய்யாப்பழமும் முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொருவர் வீடுகளிலும் நடப்பட்டு வளர்க்கப்படும் கொய்யா மரங்களைத் தவிர, இவை சதாரணமான வளவுகளில உள்ள பற்றைகளில் கூடத் தாமாகவே வளர்ந்து காணப்படும். தாமாக வளரும் கொய்யா மரங்




களைவிடக் கலப்பினக் கொய்யா மரங்களை வீடுகளில் நடுகை செய்து பராமரிப்பதன்மூலம் நிறையப்பயனை அடைந்துகொள்ளலாம்.

கொய்யாமரத்தின் பிறப்பிடம் அமெரிக்காவாக இருப்பினும் இன்று உலக நாடுகள் எங்கும் இவை வளர்ந்து பரந்து காணப்படுகின்றன.

### மருத்துவத்தன்மை

கொய்யாப்பழம் குழந்தைப் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவும் சத்துக்களை நிறைவாகத் தன்னகத்தே கொண்டது.

இதில் 'விட்டமின் 'பி' சத்து நிறைய இருப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் மந்தம் அகல்கின்றது. உண்ணும் உணவுகள் ஜீரணமடையவும் உதவுகிறது. வயிற்றுப்புண், மலச்சிகல், இருதய வலி, பல்தொடர்பான நோய்கள், குடல் கோளாறுகள் போன்ற பல நோய்கள் தீர இவை உதவுகின்றன.

ஆண்மை விருத்திக்கும், மூல வியாதி, நீரழிவு நோய்களுக்கும் இது சிறந்தது. உப்புடன் சேர்த்து இதனைச் சாப்பிடுவதன் மூலம் தொழுநோய் கூடக் குணமடையும் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

இரத்தச் சுத்திக்கும் இது சிறப்பானதாகும்.

### சத்துக்கள்

நெல்லிக்கனிக்கு அடுத்தபடியாக விற்றமின் 'சி' நிறைந்தது கொய்யாப் பழமாகும்.

அத்துடன் விற்றமின் 'பி', இரும்புச் சத்து, மாச்சத்து , புரதம், கொழுப்பு, கல்சியம் போன்ற சத்துக்கள் இதில் நிறையக்காணப்படுகின்றன.

எமது உடம்பு உற்சாகத்துக்கு துவர்ப்புச்சுவை அவசியமானது. உணவுகள் மூலம் துவர்ப்புச்சுவையானது குறைவடைவதால் உடல் களைப்படைந்து விடுகிறது. எனவே துவர்ப்புச்சுவையைப் பெறுவதற்காக கொய்யாக்கனிகளை உண்பது சிறந்தது.

உணவு உட்கொள்வதற்கு ஒரு மணி நேரம் முன்பாக கொய்யாப்பழங்களைச் சாப்பிடுவதால் பசி அதிகரிக்கும். உணவு உண்டபின் இதனை உட்கொள்வதும் தவறு அல்ல.

### ஆனைக்கொய்யா

சாதாரணமாக வெப்பமான பிரதேசங்களில் கொய்யாமரம் வளரக் கூடியது. எனினும், பெரிய அளவிலான ஆனைக்கொய்யா (அலிபேர) என அழைக்கப்படும் கொய்யா இனம் ஈரவலயத்துக்குரியதாயினும் உலர் வலயங்களில் நீர்ப்பாசனம் செய்து இதனை வளர்க்க முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அநேகமான வீடுகளில் இவ்வகைக் கொய்யா மரங்களையும், கலப்பு இனக் கொய்யா மரங்களையும் நட்டு வளர்த்து நல்ல பயனைப் பெறுகின்றனர்.

ஆனைக்கொய்யா அநேக போஷணைப் பதார்த்தங்களைக் கொண்டது. அதிக கலோரி பெறுமானத்தைக் கொண்டது. அதிக அளவில விட்டமின் ஏ,பி,ஈ ஆகிய சத்துக்களைக் கொண்டது.

ஆனைக்கொய்யா மிகவும் மென்மையான கிறீம் தன்மை கொண்ட தோலை உடையது. இதனால் இவற்றை பட்டர் கொய்யா எனவும் அழைக்கிறார்கள். கொலஸ்ரோல் அற்ற இப்பழம் நீரிழிவு நோய்க்கு சிறந்தது எனக் கூறப்படுகிறது.

ஆனைக்கொய்யாவில் 'பொலக்', 'கொட் பிறீட்' பேபிள் ஹைபிரட் என பல இனங்கள் உள்ளன. எனினும், எமது பிரதேசங்களில் இவற்றின் கலப்பினங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. கலப்பற்றபழம் ஒன்று சுமார் ஒரு கிலோகிராம் நிறையைக்கொண்டிருக்கும்.

### நடுகைமுறையும் பராமரிப்பும்

ஆனைக்கொய்யா மரங்களுக்கு இருவாட்டி மண்ணே சிறந்தது. கன்றுகளாக நடுகை செய்யும்போது ஒவ்வொரு கன்றுக்கும் இடையில் 20 அடி இடைவெளி இருப்பது நல்லது. நன்கு ஆழமாக வெட்டப்பட்ட குழிகளில் நன்கு உக்கிய மாட்டெரு, கூட்டெரு, ஆட்டெரு, கோழியெரு என்பவற்றை மண்ணுடன கலந்து இடுதல் வேண்டும். இயற்கையாகக் கிடைக்கும் உரங்கள இதற்குப் போதுமானதாகும.

காய்க்கும் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வருடமும் சிபாரிசு செய்யப்பட்ட பசளை வகைகளில் மூன்று கிலோ வீதம் இடப்படல் வேண்டும்.

மரங்கள் சில வேளைகளில் பரந்து வளராமல் மேல்நோக்கி உயர்ந்து வளரும் தன்மையுடையவையாகக் காணப்படலாம். அவற்றை உயர்ந்து வளரவிடாமல் அவற்றின் முனை அரும்புகளை கத்தரித்து விடவேண்டும். கீழே உள்ள அரும்புகளில் இருந்து புதிய கிளைகள் உண்டாகும் தன்மையை ஏற்படுத்த வேண்டும். ஒட்டு மரக்கன்றுகளாக இருப்பின் ஒட்டுக்குக்கீழ் உள்ள மரங்களில் இருந்து கிளைகள் வளரவிடாது அவற்றைக் கத்தரித்து விட வேண்டும்.

ஆனைக்கொய்யாவின் பூக்கள் வாசனையும் இனிமையும் கொண்டவை. இதனால், இவற்றில் அமர்ந்து இனிப்பை நுகரும் தேனீக்கள், குளவிகள் போன்றவற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. மகரந்தச் சேர்க்கை இடம்பெற வசதியாக தோட்டத்தில் இரண்டு அல்லது மூன்று கன்றுகளை நட்டு வளர்ப்பது நல்லது. நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படும் கன்றுகள் 3 அல்லது 4 நான்கு வருடங்களில் பூத்துக் காய்க்கத தொடங்கும்.

ஆனைக்கொய்யா பார்ப்பதற்கு கவர்ச்சியானது. உண்பதற்கும் இலகுவானது. ருசியுடையது. பெரிய பழங்களாகக் காணப்படும். இப்பழங்களில் ஒவ்வொன்றும் சராசரியாக 500 கிராம் நிறையைக் கொண்டிருக்கும். ஒரு போகத்தில் ஒரு மரத்தில் இருந்து 100 தொடக்கம் 150 வரையான பழங்களைப் பெறலாம்.

### பரிபூர்ணா

ஈக்கள் சில சமயங்களில் பழங்களைத் தாக்கலாம். இதனால் பழங்கள் அழுகி அதனுள் புழுக்கள் காணப்படும். காய்கள் அரும்பும் காலங்களில் இவற்றுக்கு பென்தியோன் போன்ற கிருமி நாசினிகளைப் பயன்படுத்தி இவற்றைக் கட்டுப்படுத்தலாம். ☆

# உணவுக்குச் சுவை தருவனவற்றை சேமித்து வைப்பது எப்படி?

எமது உணவுக்குச் சுவை சேர்ப்பவையாகப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள், இஞ்சி, மஞ்சள், உள்ளி, தேசிக்காய், மிளகு, ஏலக்காய், கராம்பு, கறுவா என்பனவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

இவற்றுள் சிலவற்றைப் பல நாளகளுக்குப் பேணிவைக்கவும் முடியும். அதன மூலம் தேவையான வேளையில் அவற்றை எடுத்துப் பயன்படுத்தலாம். அவற்றை எவ்வாறு பேணிப் பாதுகாப்பது என்பது பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

நன்கு சுத்தப்படுத்தப்பட்ட இஞ்சி அல்லது மஞ்சளைச் சுத்தமான துணியினுள் வைத்துப் பொட்டலமாக்கி நன்றாகக் கொதிக்கும் நீரில் சுமார் ஏழு, எட்டு நிமிடங்கள் வரையில் அமிழ்த்தி வைத்திருந்து எடுக்கவும்.

பின்னர் சூடாக இருக்கும் இஞ்சி, அல்லது மஞ்சள் கிழங்குகளை ஈரத் தன்மை காயும் வரையில் மிதமான வெயிலில் காற்றுப்படும் விதத்தில் உலரவிடவும். பின்னர் அவற்றை எடுத்துக் கடும்வெயிலில் வைத்து நன்றாகக் காய்ந்து உலர்ந்த பின் பத்திரப்படுத்தவும்.

புதிய மஞ்சள் அல்லது இஞ்சிக் கிழங்குகளை நன்கு கழுவிச் சுத்தப்படுத்தியபின், நீர் நிறைந்த பாத்திரமொன்றிற்குள் 24மணிநேரம் வரையில் ஊறவிடவும். அதன் பின்னர், அவற்றைப் பிளந்த மூங்கிலின் தடியினால் அல்லது வேறுவகையில் அவைகளின் தோல்களை நீக்கிக் கொள்ளவும்.

பின்னர் அவற்றை சுடப்பட்ட சுண்ணாம்பு (நீறாக்கப்பட்ட சுண்ணாம்பு) நீரில் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்துக்கு நன்றாக ஊறவைக்கவும். அவைகளை முதல்நாள் ஒரு மணி நேரமும், இரண்டாம் நாள், இரண்டு மணி நேரமும், மூன்றாம் நாள், மூன்று மணிநேரமும், நான்காம் நாள் நான்கு மணிநேரமும் மற்றும் ஐந்தாம் நாள் ஐந்துமணி நேரமும் கடும வெயிலில் வைக்கவும்.

ஐந்தாவது நாள் உலரவைத்த பின்னர் அவற்றைச் சூடு ஆறும்வரை உலர வைக்கவும். பின்னர் தகுந்த பாத்திரங்களில் பத்திரப்படுத்தவும். இம்முறையில் உலர வைத்த இஞ்சி மற்றும் மஞ்சள் போன்றவை சுமார் இரண்டு வருடங்கள் வரையில் கெட்டுப் போகாவண்ணம் பாதுகாப்பாக இருக்கும்.

உதயன்

## ஐக்கியமே ஒரேவழி!

"தமிழ்மக்களின் அரசியல்பாதை இன்று சரியான திக்கில் செல்கிறது. எவருடனும் பேரம் பேசக்கூடிய அளவுக்கு அவர்களிடம் இராணுவப்பலமும் இருக்கின்றது. மத்தியில் ஆளும்கட்சியைத் தீர்மானிக்கின்ற அரசியல் சக்தியும் அவர்களிடம் இருக்கின்றது. ஜே.வி.பியும் பொதுமக்கள்ஐக்கிய முன்னணியும் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைத்தாலும் ஆளும் கட்சியைத் தீர்மானிக்கும் சக்தி தற்போது தமிழ் அரசியல் கட்சிகளிடமே இருக்கின்றது."

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வீடமைப்புப் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத். இன்று தமிழ்க்கட்சிகள் வடக்கு - கிழக்கு எல்லைகளைத் தாண்டி கூட்டுமுன்னணி பற்றி யோசிப்பதையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

முஸ்லிம்களும் இதேபோன்று ஒற்றுமைப்படவேண்டும் என்ற தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துவதற்காக இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டினாலும் கூட, அவற்றில் ஆழமான உண்மை இருப்பதை சகலரும் ஏற்றுக் கொள்ளததான் வேண்டும்.

இன்று வரலாற்றில் முக்கியமானதொரு காலகட்டத்தை நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.

2001 டிசெம்பர் தேர்தலோடு ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் இரண்டு வருடம் இழுபட்டு இப்போது தடைப்பட்டு இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அமைதி நிலைமை தொடரப் போகின்றதா அல்லது கொடூரயுத்தம் வெடிக்கப்போகின்றதா என்ற இன்றைய இரண்டுங்கெட்டான் நிலையில் - எதிர்காலம் குறித்து வெட்டொன்று துண்டு இரண்டாகத் தீர்மானிக்கவேண்டிய - முடிவுசெய்ய வேண்டிய - காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

இலங்கை அரசமைப்பின் கீழ் அளவுக்கு அதிகமான அதிகாரங்களைத் தன்வசம் வைத்திருக்கும் ஜனாதிபதி 'நாளொரு பேச்சு, பொழுதொரு கருத்து' என்று விடயங்களைக் கூறி தென்னிலங்கை அரசியலை ஒரேகுழப்பாகக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்.

தனது அதிகாரத்தை வைத்துக்கொண்டு அடுத்துவரும வாரங்களில் அவர் நடத்தப்போகும் அரசியல் நாடகங்களின் - சூதாட்டத்தின் - மூலக்கதை குறித்து இப போதே அரசல்புரசலாகக் கதைகள் வெளியாகத்தொடங்கி விட்டன.

அந்தக் கதையின் முதல் அங்கம் - நாம் முன்னர் குறிப்பிட்டது போல சமாதான முயற்சிகளுக்கு எதிரான கறுப்பு அத்தியாயம் - இன்று காலை கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பின் அங்குரார்ப்பணமாக அரங்கேறுகின்றது.

அதைத்தொடர்ந்து விரைவில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி இடைநிறுத்துவார் (Prorogation) பின்னர் தற்போதைய அமைச்சரவையை அவர் தமது விருப்பப்படி மாற்றுவார். பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த தமது ஆள்களை முக்கிய அமைச்சர்களாக நியமிப்பார். அதுமுடிந்ததும தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பார். புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவார். - இப்படி ஓரளவு நம்பகமான தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

தார்மீகரீதியில் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் ஜனநாயக மரபுகளுக்கு முரணானவை என்றாலும் அவ்வாறு நடந்து கொள்வதற்கான முழு அதிகாரங்களும் அவருக்கு உள்ளன என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்தநிலையில் தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செயற்பாடுகளை மேல் போக்காக அவதானித்து வருபவர்கள் கூட தமக்கு அதிகாரம் இருந்தால், தார்மீகப் பண்புகள், ஜனநாயகப் பாரம்பரியங்கள் போன்றவற்றை மிதித்து ஒதுக்கிவிட்டு இதுபோன்ற அதிகாரவெறிச்செயலில் அவர் ஈடுபடமாட்டார் என அடித்துக் கூறமாட்டார்கள். எனவே, இப்படி நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றே கருதவேண்டியுள்ளது.

அப்படி ஒன்று நடந்து தேர்தல் ஒன்று வந்தால் ஈழத்தமிழர்கள் இராணுவப்பலத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பது போல, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது அரசியல் பலத்தையும் நன்கு பெருக்கிக்கொள்வது அவசியமானது. அதுவும் அடுத்து வரக்கூடிய நெருக்கடிகளை - இக்கட்டுகளை - பலத்தோடும் உறுதியோடும் எதிர்கொள்வதற்கு அது அத்தியாவசியமாகின்றது.

தங்களுக்குள் மோதிக்கொண்ட - அடித்துக்கொண்ட - ஏன் அழித்துக் கொண்ட - அமைப்புகள் கூட, இன்று தங்களுக்குள் உள்ள முரண்பாடுகளை ஒதுக்கிவைத்து விட்டு விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் ஒன்று திரண்டு ஐக்கியம் பேணுகின்றன. மாற்றுத் தரப்பினராலும் அது விதந்துரைக்கப்படுகின்றது. வடக்கு - கிழக்குக்கு அப்பாலும் தமிழரின் அரசியல் நிலையை ஐக்கியப்படுத்துவது குறித்து பிரஸ்தாபிக்கப்படுகின்றது; ஆலோசிக்கப்படுகின்றது.

இவற்றுக்கெல்லாம் காரணம் 'ஐக்கியம்' ஒன்றே இன்று தமிழரின் மீட்சிக்கு வழி என்ற உண்மையை இந்த அமைப்புக்களெல்லாம் புரிந்து வைத்திருப்பதுதான்.

பதவி ஆசைக்காகவும் தமிழரைப் பிரிப்பதையே நோக்கமாகவும் கொண்ட சக்திகள் வீசும் எச்சில் இலைகள், 'எலும்புத் துண்டுகள்' போன்றவற்றுக்காகவும் துரோகம் செய்து, தமிழர்களின் ஐக்கியத்தைக் குலைக்கமுனைந்து 'ஆனந்தம்' காணும் தமிழ்த் தலைவர்கள், தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்து நடப்பது நல்லது.

# எழுத்தாளர், இலக்கியவாதிகளுக்கு வாழும் காலத்தில் கௌரவம்

## வழங்கவேண்டும் என்கிறார் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம்,ஜன.20

எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியவாதிகள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக வருடம் தோறும் வழங்கப்படும் 'சம்பந்தன் விருது' மூதறிஞர் சு.வேலுப்பிள்ளைக்கு வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமைவகித்து உரைநிகழ்த்திய போதே பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை மூத்த எழுத்தாளர் தி.வரதராஜன (வரதர்), ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

'சு.வே. சிறுகதைகள்' மற்றும் 'பாற்காவடி' ஆகிய படைப்புக்களுக்காக சம்பந்தன் விருதுபெற்ற மூதறிஞர் சு.வேலுப்பிள்ளைக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொன்னாடை போர்தது்க் கௌரவித்தார். கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) மூதறிஞருக்கு மாலை அணிவித்து பாராட்டுப் பத்திரத்தையும் ஒரு தொகைப் பணத்தையும் வழங்கினார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

'சம்பந்தன் விருது' சிறுகதை எழுத்தாளர்கள' மற்றும் இலக்கியவாதிகளையும் கௌரவித்து வழங்கப்படுவதாகும். இது கடந்த 5 வருடங்களாக வழங்கப்பட்டுவருகிறது.

இம்முறை இவ்விருது சு.வேக்கு வழங்கப்படுவது மிகவும் பொருத்தமானதே. கடந்த பல வருடங்களாக யாழ். மண்ணில் இருந்து ஆக்க இலக்கியங்களையும், சிறுகதைகளையும் இயற்றி பல்வேறுபட்ட விருதுகளைப் பெற்ற இவர், தான் ஒருபடைப்பாளி என்பதனை விளம்பரம் செய்யாது சேவைசெய்தவர்.

சிறுகதை எழுத்தாளரும், சிறந்த எழுத்தாளரும் கல்விமானுமாகிய சு.வேயை இலக்கிய அறிஞன் என்று அடையாளப்படுத்தியது அவர் எழுதிய 'பாற்காவடி' என்ற சிறுகதைத தொகுப்பே ஆகும்.

இவர் சிறுகதை மற்றும் ஆக்க இலக்கியங்களை மட்டும் எழுதுவதோடு நின்றுவிடாது, பாடசாலை மாணவர்களுக்கு பல வினாத்தொகுப்புக்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு கவிஞனோ அன்றிக் கலைஞனோ அவன் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் வளர்ந்துவரும் இளைய தலைமுறை அவர்களைப் பற்றியும் அவர்களால் உருவாக்கப்பட்ட படைப்புக்களைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ளமுடியும் - என்றார். (எ-5,7)

## எறியால்பிட்டி இந்து மயானத்தை பயன்படுத்த இராணுவம் அனுமதி

கடந்த 8 வருடங்களுக்கு பின் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்தை மக்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மயானத்துக்குச் செல்வதற்கான வீதியும் இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர் எஸ். ஸ்ரீநிவாசன், கச்சாய் கிராம அலுவலர் அற்புதஜெயம் உட்பட மக்கள் பிரதிநிதிகளுக்கும் 521 ஆவது படையணியின் பொறுப்பதிகாரிக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னா இராணுவத்தினர் இதற்கு அனுமதியளித்துள்ளனர்.

கச்சாய், எறியால்பிட்டி இந்துமயானத்தை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறுகோரி அப்பகுதி மக்கள் முன்னர் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

இந்த இந்துமயானத்தை கச்சாய், அல்லாரை, மீசாலை, வெள்ளாம்போக்கட்டி, பாலாவி, கெற்பேலி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மக்கள் பயன்படுத்திவந்தனர். பின்னர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் இப்பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டது.

இதனால், இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளாம்போக்கட்டி கொப்பிலோ மயானத்தைப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ.8-74)

## அரியாலை உரக்களஞ்சியத்துக்கு ஞாயிறன்று அடிக்கல் நடப்பட்டது

கமநலசேவைகள் திணைக்களத்தின் உப அலுவலகமும் உரக்களஞ்சியமும் அரியாலை தபாற்கட்டைச் சந்திப்பகுதியில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான கட்டடத்தை அமைப்பதற்காக அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான காணி நீண்டகால குத்தகையில் பெறப்பட்டுள்ளது.

'நிகொட்' நிறுவனத்தின உதவித் திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்நடும் வைபவம் கடந்த ஞாயிறன்று அரியாலை கமத்தொழில் சம்மேளனத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. யாழ். செயலக பிரதம கணக்காளர் எஸ்.சண்முகநாதன் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நிகொட் நிறுவன அதிகாரிகள், கமநலசேவைகள் திணைக்கள அதிகாரிகள் ஆலய பரிபாலன சபையினர் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எட்டுமாத காலத்தினுள் இந்தக் கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக நிகொட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-30)

## கைதடி அரச மருந்தகத்தில் ஊழியர்களுக்குப் பற்றாக்குறை

கைதடியில் உள்ள அரச மத்திய மருந்தகத்தில் ஊழியர் பற்றாக்குறையினால் நோயாளர்களும் அங்கு கடமைபுரியும் உத்தியோகத்தர்களும் பெரும்சிரமங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மருந்தகத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் மீள்நியமனம் செய்யப்பட்டு கடமைபுரிந்து வந்த மருந்துக் கலவையாளர்கள் கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து கடமைக்குச் சமுகமளிக்கவில்லை என்றும் -

இதனால், அங்கு கடமைபுரியும் வைத்தியரே நோயாளர்களைப் பார்வையிடுவதுடன், அவர்களுக்கான மருந்துகளை வழங்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது.

மேலும், மருந்தகத்தின் அருகிலிருக்கும் வேறு அரச நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் இந்த மருந்தகத்திற்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே, நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இம் மருந்தகத்திற்கு உடனடியாக மருந்துக் கலவையாளர் ஒருவரையும் சிற்றூழியர் ஒருவரையும் நியமனம் செய்துதருமாறும் - மின் இணைப்பை ஏற்படுத்தித்தருமாறும் இந்தப் பிரதேச மக்கள் மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளனர்.

இந்த மருந்தகத்துக்கு கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி மற்றும் மட்டுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள நாளாந்தம் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-75)

**நாளை**

தை 07
புதன்கிழமை
(21.01.2004)
திதி : அமாவாசை
பி.இ. 3.21 வரை
நட்சத்திரம்: பூராடம்
பகல் 9.15 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம்: 5.05-6.34
ராகுகாலம்: 12.35-2.05
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மோகம் அனைத்திலும் கண்மூடித்தனம் சிறிது உண்டு. ஆனால், பணமோகத்தில்தான் கண்மூடித்தனம் மிக அதிகம்.

## தென்மராட்சி பஸ் சேவை சீரில்லை எனப் புகார்

யாழ்ப்பாணம்,ஜன.20

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் அண்மைக்காலமாக சீர்குலைந்துள்ளன என பிரயாணிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ். நகருக்குக் கடமைகளுக்காக அன்றாடம் வந்துசெல்லும் மாதாந்த பருவச் சீட்டுப்பெற்ற அலுவலர்களும், பாடசாலை மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உசனில் இருந்து காலை 6.30 மணிக்கு யாழ். நகருக்கு கடமைக்காக வருவோரை ஏற்றிவரும் பஸ் அடிக்கடி தடைப்பட்டுவிடுவதாகவும் -

கடந்த ஒருவார காலத்துக்கும் மேலாக இந்தச்சேவை நடைபெறவில்லை என்றும் - அங்கிருந்துவரும் அரச அலுவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, காலை 7 மணிக்கு உசனில் இருந்து புறப்படும் பாடசாலை பஸ்சேவை சீரற்றிருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் இரவு 7.15 மணிக்கு யாழ். மத்திய பஸ்நிலையத்திலிருந்து உசனுக்கு மேற்கொள்ளப்படும் பஸ்சேவை கடந்த 6 ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ச்சியாக இடம்பெறவில்லையெனவும் -

மாலை 4 மணிக்கு முகமாலை நோக்கிப்புறப்படும் பஸ்சேவையில் அடிக்கடி நேரமாற்றம் செய்யப்படுவதாகவும் - கூறப்பட்டது. (எ-8-15)

## மின்சாரசபையின் அலுவலகம் ஒன்றை கொடிகாமத்தில் திறந்து உதவுக!

### மின்பாவனையாளர் தரப்பில் கோரிக்கை

கொடிகாமம் பகுதியில் மின்சாரசபையின் உபஅலுவலகமொன்றைத் திறக்குமாறு இப்பகுதி மக்கள் மின்சார சபையிடம் கோரியுள்ளனர். தற்பொழுது சாவகச்சேரியிலுள்ள மின்சாரசபை அலுவலகத்தின் மூலமே மிருசுவிலிலிருந்து மட்டுவில் அடங்கலாக நாவற்குழி வரையிலான பகுதிகளில் மின் இணைப்புக்கள், மின் பராமரிப்பு மற்றும் அவசர திருத்தவேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால், தென்மராட்சி கிழக்குப் பகுதிகளான கொடிகாமம், மிருசுவில், கச்சாய், வரணி, வேம்பிராய், மீசாலை, அல்லாரைப் பகுதிகள் தற்சமயம் 24 மணிநேர மின்விநியோகத்தைப் பெற்றுள்ளன. மேலும், இந்த மின்விநியோகத்தை உசன் மற்றும முகமாலை, பளைப்பகுதிகள் வரை விஸ்தரிப்பதற்கான வேலைகளும் நடைபெற்றுவருகின்றன.

இப்பகுதிகளில் மின்தடைகள் ஏற்படும் வேளைகளில் அவற்றைத திருத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி, கச்சாய் வீதியில அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகம் மேற்கொள்கிறது. இந்த அலுவலகம் கொடிகாமம் பகுதியிலிருந்து பல கிலோமீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளதனால் மேற்குறிப்பிட்ட தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மின்தடைகள் ஏற்படும் வேளைகளில், அவர்களால் அதுபற்றி உடனடியாக அறிந்துகொள்ளவோ அல்லது அவர்களுக்கு தெரியப்படுத்தவோ முடியாதிருப்பதாக இப்பகுதி மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், இப்பகுதிகளில் சிறியதொரு காரணத்திற்காக மின்தடைகள் ஏற்படும் வேளைகளில்கூட அவற்றைச் சீர்செய்து மினவிநியோகம் கிடைப்பதற்கு சில சந்தர்ப்பங்களில் நீண்டநாள்கள் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைக் கருத்திற்கொண்டு தென்மராட்சி கிழக்கின் மத்திய பகுதியான கொடிகாமத்தில குறைந்தபட்சம் ஒரு ஊழியர்களுடனாவது 24மணிநேர முமஅவசர திருத்தவேலைகளை உடனடியாக மேற்கொள்ளக்கூடிய உப அலுவலகம ஒன்றை நிறுவுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-8-15)

7 ஆம் பக்கத்தில்....

'ஈழத்துச்சித்தர் பரம்பரையில் உதித்த நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள்' என்ற தலைப்பில் இன்றைய உதயனின் 7ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள கட்டுரையை எழுதியவா நயினை நாகமுத்து யோகநாதன ஆவார்.

# நிரந்தர சமாதானம் உருவாகுவதற்கு தென்னிலங்கை மக்களைத் திரட்டுங்கள்!

## அங்கிருந்து வந்த மதகுருமாரிடம் பேராசிரியர் சிற்றம்பலம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.20

நிரந்தர சமாதானத்தை உருவாகுவதற்காக மக்கள் சக்தியைத் தென்னிலங்கையில் திரட்டுங்கள்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தென்னிலங்கை மதகுருமாருக்கு வேண்டுகோள் விடுத்தார். மக்கள் 'சமாதான அரங்கு' என்ற அமைப்பின் கிளையை யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்.மனித முன்னேற்ற நடுநிலைய மண்டபத்தில இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தென்னிலங்கையிலிருந்து வந்த வண.மாதம்பாக அஸ்ஸஜி தேரர், அருட்தந்தை அநுரபெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய போதே பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**பேராசிரியர் சிற்றம்பலம்**

பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சமாதானம் பற்றிய விழிப்புணர்வும், தெளிவும் தென்னிலங்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். அப்போதுதான் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும். ஆகவே, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த தென்னிலங்கை மக்களை ஒன்று திரட்டுங்கள்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் தமிழர்களுடைய பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்க்க முன்வருவார்களா என்பது சந்தேகம்தான்.

அரசியல் தலைவர்களை மக்கள்தான் உருவாக்குகிறார்கள். ஆகவே மக்களே ஒன்று திரண்டு சமாதானத்தை ஏற்படுத்தும்படி அரசியல் தலைவர்களிடம் கூற வேண்டும். ஆனால், அத்தகையதொரு நிலைமை இங்கு இல்லை என்பது துரதிஷ்டமாகும்.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இந்தச் சமாதானச் சூழ்நிலையால் வடபகுதி மக்களுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. போர்ச்சூழலில் வாழ்ந்தது போன்றே இப்போதும் வடபகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்போதும் 60ஆயிரம் மக்கள் அகதி முகாம்களிலேயே தங்கியுள்ளனர். வடபகுதி மக்களின் இந்த நிலைமைகளை தென்னிலங்கை மக்களுககுத் தெரியப்படுத்துங்கள். சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல தென்னிலங்கையில் மக்கள் முன்வர வேண்டும் - என்றார் பேராசிரியர்.

**பரமநர்தன்**

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்த மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தங்களது சுயலாபத்துக்காகத் தமிழர்களைப் பகடைக்காய்களாக மாற்ற நினைக்கிறார்கள்.

தமிழர் தலைவர்கள், கடந்த 50 வருடங்களாக சமாதானத்தையே கோரி வருகின்றனர். வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்மக்களும் சமாதானத்தையே ஏகோபித்த குரலில் வலியுறுத்துகின்றனர். இப்போது தென்னிலங்கை மக்களுக்குத்தான் சமாதானம் குறித்து விளங்கவைக்கவேண்டும் - என்றார் அவர்.

**மௌலவி சுபியான்**

மக்கள் பணிமனை தொடர்பாளர் மௌலவி சுபியான் கூறியதாவது:-

சமாதானம் உருவாக்கப்படுவதற்கு தென்னிலங்கையில் உள்ள இனவாதம் ஒழிக்கப்படவேண்டும். இதேவேளை சமாதானத்தின் துரோகிகளாக அதிகாரவர்க்கத்தில் உள்ளவர்கள்தான் இருக்கிறார்கள். யுத்தத்தின் மூலம் பணம் சுருட்டிக் கொண்டிருந்த முதலாளி வர்க்கம்தான் சமாதானத்தை விரும்பவில்லை. இவர்களிடம் இருந்து மக்களைப் பிரித்து எடுக்க வேண்டும் - என்றார் மௌலவி சுபியான்.

**வண.பிதா இமானுவல்**

வண.பிதா கலாநிதி எஸ்.இமானுவல் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

சிங்கள மக்கள் தமிழர்களுடைய பிரச்சினைகளை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை. இதனை அவர்களுக்கு நாங்கள் தெரியப்படுத்த வேண்டும். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நாட்டில் சம அந்தஸ்து உள்ளவர்கள் என்று மனப்பூர்வமாக அனைத்துச் சிங்கள மக்களும் கருதுவார்களா என்பது சந்தேகமே.

இத்தகைய இனவாதம் நாட்டுக்குக் கேடு விளைவிக்கும் என்பதை தென்னிலங்கை மக்கள் உணர வேண்டும்- என்றார்.

**வணபிதா பேர்னாட்**

வணபிதா ஏ.ஈ.பேர்னாட் கூறியதாவது:-

யுத்தத்தால் அழிந்து போன எமது தேசம் முற்றாகச் சீர் செய்யப்படவில்லை.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் நாட்டின் ஒரு பகுதியே முன்னேறிக்கொண்டு இருக்கிறது. தமிழர் பிரதேசம் தாழ்ந்து கொண்டே செல்கின்றது. இது கவலைக்குரியது.

-என்றார் வண.பிதா.

'மக்கள் சமாதான அரங்கு' அமைப்பை நெறிப்படுத்தும் குழுவைச் சேர்ந்த வண.மாதம்பாகம அஸ்ஸஜீ தேரர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

குடாநாட்டு மக்களுடைய பிரச்சினைகளை எங்களிடம் தெரிவித்துள்ளனர். இவற்றை பிரதமரிடம் எடுத்துக் கூறவுள்ளோம். நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றோம். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட அனைவரும் ஒன்று திரண்டு பாடுபட வேண்டும் - என்றார் தேரர். இந்த நிகழ்வில் சி.வி.கே. சிவஞானம், தந்தை அநுரா பெரேரா, வணபிதா ஜெயக்குமார் அடிகளார் மற்றும் இந்துமத குருபீடத்தைச் சேர்ந்த கிருபாகர சூரியகுருக்கள், தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம், ம.க.ஈழவேந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-7)



கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி அமைப்பின் செயலாளர் நாயகமும் தமிழர் கூட்டமைப்பின் உறுப்பினருமான சுரேஸ்பிரேமச்சந்திரன் கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்குவதையும் அருகில் சனசமூக நிலைய உறுப்பினர்கள் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

(படம் வலி.கிழக்குச் செய்தியாளர்)



ஆஎ.னக்கோட்டை, சாவற்கட்டு தாரகா கணவனை இழந்தோர் மலர்வுமையத்துக்கு அலுவலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த திருமதி சூ.டேவிற்பாமர் நாடாவை வெட்டி திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் மலர்வுமைய தலைவி திருமதி இ.சைலாவும் காணப்படுகின்றார்.

(எ-185)


உ
கும்பழாவளையான் துணை

### விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தை மாதம் 8ஆம் நாள் (22-01-2004) வியாழக்கிழமை காலை 8.47 மணிமுதல் 10.17 மணி வரையுள்ள பூர்வபக்ஷ பிரதமையும் திருவோண நட்சத்திரமும் கூடிய கும்ப லக்கின சுப முகூர்த்த வேளையில்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்களின் சிரேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

**குமாரதாஸ் சர்மாவிற்கு**



பருத்தித்துறை சிவன் கோயில் முன்னாள் அர்ச்சகர் சிவஸ்ரீ ச.ஜோதிஸ்காமக் குருக்களின கனிஷ்ட புத்திரி

சௌபாக்கியவதி **வத்சலாதேவியை**

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் செய்ய எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகப்பெருமானின் திருவருளுடனும் பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் நல்லூர் சிவன்கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் இஷ்ட மித்திரபந்துக்களுடன் குடும்பசமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சமாவர்த்தனம் :- காலை 5மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வதூவரகிரகப் பிரவேசம் ; பி.ப 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வரவேற்பும் விருந்துபசாரமும் :- மணமகள் இல்லம் இல.34 பேராதனை வீதி, கண்டியில் (25-01-2004) ஞாயிறு மாலை5மணியளவில் நடைபெறும்.**

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுபமஸ்து
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்,
(சுப்பையாக் குருக்கள் ),
சாந்திமலர் தம்பதிகள்,
இ.சீதாலட்சுமி அம்மா,
வை.ஞானசேகர ஐயர்,
கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்,
அளவெட்டி.

சிவஸ்ரீ.ச ஜோதீஸ்காமக் குருக்கள்
இல.34 பேராதனை வீதி,
கண்டி
தொலைபேசி: 081 2228018

(27327) (32-17-13)



### இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(சி-29244) (24-13-16)



### வேலையாள்கள் தேவை

எமது உணவகத்திற்கு
- சமையல் செய்வோர்
- சமையல் உதவியாளர்
- றொட்டி மேக்கர்
- சப்பிளெயர் உடன் தேவை. பகுதிநேரமாகவும் வேலை செய்யலாம்.

நேரில் தொடர்புகளுக்கு

**சாலினி உணவகம்**

இல.05 திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

(27334)(32-17-13)



### கண்ணீர் அஞ்சலி

**திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம்**

மனிதருள் மாணிக்கமாய் எண்ணற்றோர்க்கு இரங்கிடும் அருள் நெஞ்சம் கொண்டவராய் அமலன் அடி பணிந்து அறவாழ்வு வாழ்ந்தவராய், விருந்தோம்பும் பண்பும், வலது கை கொடுப்பதை இடது கையறியா ஈகைக் குணமும் கொண்டவரான திருமதி லில்லி கிறேஸ் தேவசகாயம, எமது நண்பி பொலினுக்கு மாத்திரமல்ல, பலருக்கு அன்னையாகத் திகழ்ந்தவர். அவர் மறைவு அகவை எண்பதில் நிகழ்ந்தாலும், இன்னும் நூறு வருடம் வாழ்ந்திருக்கலாம் என எண்ணத் தோன்றும் 'உயர் மனிதம்'கொண்டவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

*யாழ்ப்பாணம்.* (27331)(17-13-32)செல்வி, ஜனனி, சேகர் (குடும்ப நண்பர்)

# புலிகளின் தனித்துவத்தை மக்களிடம் வெளிப்படுத்தி நின்றவர் கேணல் கிட்டு

## நினைவு நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,ஜன.20

போராட்ட அமைப்புகள் என்று கூறிக்கொண்டு மக்கள் மத்தியில் பல இயக்கங்கள் குழப்பங்களை இம்மண்ணில் உருவாக்கிக் கொண்டு இருந்த வேளையிலும் கூட புலிகளின் தனித்துவத்தை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தியவர் கேணல் கிட்டுவே.

இவ்வாறு தமிழீழ கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்தார்.

கேணல் கிட்டுவின் 11 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்காவில் யாழ்ப்பாணம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.சிவஞானசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே கவியன்பன் மேற்கூறப்பட்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

எமக்கென்று ஒரு கட்டுப்பாட்டு பிரதேசத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த பெருமை கிட்டு அண்ணனுக்கே உரியதாகும்.

முதல் தடவையாக யாழ். குடாநாட்டின் பல்வேறு இராணுவ முகாம்களையும் முடக்கி இம் மண்ணிலேயே கட்டுப்பாட்டு பிரதேசத்தை உருவாக்கினார்.

யாழ். குடாநாட்டில் மக்களிடையே பல்வேறு வகையான கட்டமைப்புகளை உருவாக்கி மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டார். இத்தகைய செயற்பாட்டின் மூலம் போராட்டத்தை விரைவுபடுத்தி முன்னெடுத்துச் சென்றார்.

1979 ஆம் ஆண்டில் இயக்கத்தில தன்னை முழுநேர போராளியாக இணைத்துக் கொண்ட காலம் முதல தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டார். தனது கால் ஒன்றை இழந்த போதிலும் கூட இலட்சியப்பாதையில் நோக்கிச் செல்வதில் அவர் பின் நிற்கவில்லை.

மக்கள் கட்டமைப்புகளை எவ்வாறு உருவாக்கவேண்டும்; செயற்படுத்தவேண்டும்; தீய செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்தவேண்டும்; அழிக்கவேண்டும் என்பதில் எல்லாம் முனைப்பாக முன்னின்று செயற்பட்டவர் கிட்டு.

இன்று நாமும் சர்வதேச சமூகமும் புலிகளைப் பற்றி புகழ்ந்து பேசும் நிலை உருவாகியுள்ளதென்றால் கேணல் கிட்டுவின் திட்டமிட்ட செயற்பாடுகளே அதற்குக் காரணம்.

தாயகத்துக்கு வெளியே புலம்பெயர்ந்து சென்ற மக்கள்கூட தமது தனித்துவத்தை இழந்துவிடாது வாழ்வதற்கான வழிகாட்டல்களை மேற்கொண்டதுடன் போராட்டத்திலிருந்து விலகிச் செல்லாமலும் பாதுகாத்துக்கொண்டார்.இவர்களை விடுதலைப் போராட்டத்தின் பக்கத் துணையாளர்களாக செயற்பட ஏற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

சமாதான வழியில் அமைதியான முறையில் எமது பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்றால் அதற்கான சாத்வீக வழிகளையும் கூட ஏற்று செயற்பட்டார். சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்களின் போராட்டத்தையும் அதன் உண்மை நிலையையும் நியாயத்தன்மையையும் எடுத்துக்கூறி சர்வதேசத்தின் ஆதரவையும் எமது போராட்டத்தின் பால் திருப்பிய பெருமையும் கேணல் கிட்டுவையே சாரும் - என்றார்.

(ஒ-5-86)

# பன்னிப்பிட்டிய தேவாலயம் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்!

## நேற்று முன்தினம் அதிகாலை சம்பவம்

பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் கத்தோலிக்க தேவாலயம ஒன்று இனந்தெரியாத நபர்களால் தாக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் அதிகாலை இரண்டு மணியளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தலங்கம பொலீஸார் தெரிவித்தனர்.

தேவாலயத்தில் புனித அந்தோனியார் சிலையைச் சூழ இருந்த மறைப்பு உடைக்கப்பட்டுள்ளது. அத்துடன், தேவாலயத்தின் வாயிலில் டயர் ஒன்றும் போட்டு எரிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தொடர்ச்சியாகத தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்ற போதும், அவற்றுடன் தொடர்புடையவர்களைப் பொலீஸார் இன்னும் கைது செய்யாதது கவலைக்குரிய விடயம் என கொழும்பு மறை மாவட்ட ஆயர் மேரியஸ பீரிஸ் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பொலீஸார் தமது கடமையைச் சரியாகச் செய்தால் மதங்களுக்கிடையிலான மோதலைத் தவிர்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்

(ஐ-9)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கையெழுத்து வேட்டை

கொழும்பு,ஜன.20

கடந்த 25ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் தடைச் சட்டத்தை அரசமைப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக்கோரி மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், வடக்கு - கிழக்கு மக்களிடையே கையெழுத்து வேட்டை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தது. அதிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அமைப்பின் சட்ட இணைப்பாளர் நெபிடியஸ் தெரிவித்தார்.

இது குறித்து பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:-

பயங்கரவாதச் தடைச்சட்டம் ,அரச பயங்கரவாதத்தைத் தான் உருவாக்கியது. இது பெரும்பாலும் தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்தது.

இச்சட்டம் குறித்த சாதாரண மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் மூலமாகவே இந்தச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம.

அதற்காக மாவட்டங்கள் தோறும் இவ்வாறான கருத்தரங்கை நடத்துவோம் இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும எனக்கோரும் கையெழுத்தை வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களில் உள்ள மக்களிடம் இருந்தும்பெறுவோம். கையெழுத்தின் திரட்டை நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கக் கோருவோம்.

அத்துடன், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இற்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் - இப்படி றெமிடியஸ் தெரிவித்தார்.

(ஐ-9)

## அம்பாறைக் கரையோரப் பகுதியில்

# முஸ்லிம் பிரதேசங்களில் தேர்தல் நடத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை

கல்முனை,ஜன.20

அம்பாறை முஸ்லிம் கரையோரப் பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இம்முறை நடத்தாமல் பின்போட்டால் வழக்குத்தாக்கல் செய்யப்படும். -இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம். 'சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருகிறோம்' என்று அம்பாறையில் வைத்து வேட்பாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் ஹக்கீம் அறிவித்தார்.

ஏற்கனவே பின்போடப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் இம்மாதம் 25ஆம் திகதி முன்னைய அறிவிப்பின்படி நடந்தாகவேண்டும். ஆயினும், அந்தத் திகதியில் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை வடக்கு - கிழக்கில் இல்லை என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தவிர்ந்த ஏனைய அரசாங்க அதிபர்கள் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை அம்பாறை கரையோரப் பிரதேச உள்ளூராட்சி சபைகளில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட இருக்கும் வேட்பாளர்கள் மத்தியில் அமைச்சர் ஹக்கீம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

தேர்தலில் வாக்களிப்பது மக்களின் உரிமையும் கடமையுமாகும். அது ஒரு ஜனநாயக மரபும் கூட. வடக்கு - கிழக்கில் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்தத் தேர்தலை தேர்தல் ஆணையாளரால் மட்டும் நடத்திவிட முடியாது. தேர்தலை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை.

பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பவர் ஜனாதிபதி. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் இந்த இடத்தில் வைத்து தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை விடுமாறு ஜனாதிபதிக்குப் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன்.

ஒட்டு மொத்தமாக வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்த வேண்டும். அது முடியாவிட்டால் முஸ்லிம் பெரும்பான்மையாக உள்ள இடங்களிலாவது தேர்தலை நடத்த வேண்டும். அதிலும், சங்கடங்கள் இருக்குமானால் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்களின் ஏழு உள்ளூராட்சி சபைகளுக்காவது, கண்டிப்பாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும். அதற்கான காரணங்களை தெரிவத்தாட்சி அலுவலர்கள், தேர்தல் ஆணையாளருக்கு விளக்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைதததும் இருக்கின்றன என்றே பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே, அரசியல் காரணங்களுக்காக மட்டுமே தேர்தலைப் பிற்போடும் தீர்மானம் மேற்கொள்ளப்படலாம். அதை அனுமதிக்கமுடியாது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசசபைகளுக்கான தேர்தலை நடத்த விடாமல் தடுப்பதற்கு பல்வேறு தரப்புக்கள் திரைமறையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த விடயத்தில் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

தற்போது உள்ளூராட்சி மன்றத்தேர்தலை ஒத்திவைத்துவிட்டு இன்னும் ஒரு சில மாதங்களில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற வகையில் அம்பாறை மாவட்ட பாதுகாப்பு நிலைவரங்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. இதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசித்து வருகின்றது.

- இவ்வாறு ஹக்கீம் கூறினார்

# வைரவர் ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஜன.19

வடலியடைப்பு கும்பந்தவத்தை ஞானவைரவர் ஆலயம் புனரமைப்புச செய்யப்பட்டு வருகின்றது.

விரைவில் இப்புனரமைப்பு பணிகள் பூர்த்தியடையும் என்றும்.

அதனைத்தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

# ஈழத்துச் சித்தர் பரம்பரையில் உதித்த நயினாதீவு முத்துக்குமாரசுவாமிகள்

**நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படும் ஸ்ரீமத்முத்துக் குமாரசுவாமிகளின் 55 ஆவது குரு பூசைத் தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**


நயினாதீவு புனித பூமியில் 1897 ஆம் ஆண்டு ஆறுமுகம் பார்வதி தமபதியினருக்கு எட்டுப்பிள்ளைகளில் ஆறாவது மகனாக அவதரித்து அகிலம போற்றும் மகனாக பிரகாசித்தவர் நயினாதீவுச்சுவாமிகள் எனப்போற்றப்படும ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமிகள். சிறு வயதிலே நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் கல்வி பயின்ற அவரிடம் கவிபாடும் வல்லமையும் ஆன்மீக சிந்தனைகளும் முளைவிட்டிருந்தன. அன்றைய மாணவர்களில் வித்தியாசமான இவருக்கு படிப்பில் நாட்டம் இருக்கவில்லை இதனால், இவரது தமயனார் முருகேசு என்பவர் கொழும்பில் பொறளை என்னும் இடத்தில் உள்ள தனது கடையில் இவரைச சேர்த்து கண்காணித்துக் கொண்டிருந்தார்.

இவருக்கு வியாபாரத்துறையிலும ஆர்வம் இருக்கவில்லை. இப்படி இருக்கும் காலத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த ஒரு பெரியோரை இவருக்கு சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அப்பெரியாரும் இவர் இருந்த இடத்தில் சிலநாளகள் தங்கியுள்ளார். தன்னை ஆளவந்த சற்குரு என்பதைப் அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. ஒருநாள் அப்பெரியாரும் முத்துக்குமாரும் கதிர்காமத்துக்கு சென்றார்கள். அங்கு கதிரமலைக்கு செல்லும் வழியில் இரவுநேரமானதால் ஒரு மரத்தடியில் தங்கலானார்கள். அந்த நிசப்தமான இடத்தில் - நிசப்தமான வேளையில் முத்துக்குமாருக்கு அப்பெரியவரால் தீட்சையும், உபதேசமும் கொடுக்கப்பட்டது. தானேவந்து தடுத்தாட்கொண்ட சற்குருவின் கருணையைக்கண்டு காதலாகி கசிந்துருகி கண்ணீர் மல்கி உடல் சிலிர்க்க வீழ்ந்து நமஸ்கரித்து தோத்திரம் செய்து நின்றார்.

மறுநாள் குருவும் சீடனுமாய் கதிர்காமத்துக்கு வந்து கந்தனின் தரிசனம பெற்று மறுதினம் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். முத்துக்குமாருவின் மனம் ஞானவழியில் போக நாட்டம் கொண்டதால் குருவுக்கு சேவை செய்தே ஆன்ம ஈடேற்றத்தை பெறவிரும்பினார்.தனது எண்ணத்தை குருவிடம் கூறி அவரைத் தன்னுடனே தங்குமாறு வேண்டினார். வந்த வேலை முடிந்ததென எண்ணிய பெரியவர் ஒருநாள காலை வெளியே சென்று மீண்டும் திரும்பவில்லை.

முத்துக்குமாரரோ தம்மை ஆட்கொண்ட குருநாதரை எங்கும் தேடி காணமல் பித்தர்போல் ஆனார். தன்னகத்தேயுள்ள இறைவனைக்காணமனம் ஈடுபட்டதனால் தமையனாரின் கடை வேலைகளில் ஈடுபாடு குறைந்து ஞான நாட்டமே கூடியிருந்தது. இதனால் தமயனாரின் கண்டனத்திற்கு ஆளானார். ஒருநாள் ஒரு கவிதையை எழுதி வைத்துவிட்டு எவருக்கும் சொல்லாமல கடையைவிட்டுச் சென்று விட்டார். சென்றவர் மீழவில்லை தமையனார் முருகேசுவும், உறவினர்களும் எங்கு தேடியும் அவரை கண்டுகொள்ள முடியாமல் போய்விட்டது.

அக்காலத்தில், இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய இராச்சியத்தின் கீழ் இருந்தமையால் ஒருவித



கட்டுப்பாடுகளும் இல்லாமல் இந்தியாவுக்கு போய்வரக்கூடியதாக இருந்தது. இலங்கையிலும் பல சேத்திரங்களிலும் தேடி தனது குருவை கண்டு கொள்ளாமையினால் இந்தியா சென்று தலங்கள்தோறும், தீர்த்தங்கள் தோறும் குருவைத்தேடலானார். இச் சம்பவம் அவருக்கு இந்தியாவின் புனித தலங்களை சந்திக்கும் வாய்ப்பை அளித்து அவரின் ஞான நாட்டத்தை வளர்த்தது.

இவ்வாறு தலங்கள் தோறும் சென்ற முத்துக்குமார் எந்த ஞான குருவிடம சேர வேண்டுமென திருவருள் வகுக்கப்பட்டு இருந்ததோ அந்த ஞானகுருவை சந்தித்து அவரிடம் சந்நியாசம் வாங்கிக்கொண்டார். அவரின் நிழலில் சில வருடங்கள் தங்கியிருந்து பக்குவ நிலையை எய்தினார். பின்னர் திருவண்ணாமலையில் சித்தர்களும், தவயோகிகளும் வாழும் அருணாசலேஸ்வரர் ஆலயத்திலுள்ள மலைக் குகைகளில் சமாதிநிட்டையில் அமர்ந்திருந்த சுவாமிகள் ரமண மகரிஷியுடன் சிலகாலம் தங்கியிருந்து அவரின் ஞானஉபதேசம் பெற்று இலங்கை திரும்பினார்.

1933ஆம் ஆண்டு சுவாமிகள் நீண்ட சடா முடியுடன் பளபளப்பான மேனியில் காவியுடைதரித்து நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ காலத்தில் நயினாதீவுக்கு வருகை தந்திருந்தார். மஹோற்சவ காலத்தில் சாதுக்கள் பலர் வருவது இப் புண்ணிய பூமிக்குரிய ஒரு தனிச் சிறப்பு. அதனால், இவரை எவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. திருவிழாக்காலம் முடிந்த பின்பும் இவர் அம்பாளின் ஆலய வீதியின் வடமேற்கு திசையாகவுள்ள அன்னப் பிள்ளை மடத்தில் இரவு நேரத்தில் தங்கலானார். பகலில் நயினாதீவில் உள்ள ஆலயங்களைச் சுற்றி வருவார். ஆலய வீதிகளிலுள்ள மர நிழலகளில் தியானநிஷ்டையில் இருந்தும், சீடர்களுக்கு உபதேசம் செய்தும் அற்புதங்களைப் காட்டியும் வந்தார். இவரை இவ்வூர் மக்களும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இவரின் சக்தி மிகுந்த சிவயோக நிலையை அறிய முடியாமலும் இருந்தனர்.

ஈழத்து இல்லற ஞானி எனப் போற்றப்பட்ட ஆத்மஜோதி வெளியீட்டின் ஆரம்ப ஆசிரியரான க.இராமசந்திரா முத்துக்குமார சாமிகளின் அருளைப் பெற்றவர்களில் ஒருவர் மற்றொருவர், நயினாதீவில் பெரிய வாத்தியார் என அழைக்கப்பட்ட ச.நா.கந்தையா ஆசிரியர். இவ்விருவரும், இவரைத் தமது முதல் குருநாதராக வரித்துக் கொண்டார்கள்.

சுவாமிகள் சமாதிநிலை அடைவதற்கு சில வருடங்களுக்குப் முன் தான்வைத்துப் பூசித்த தங்கவேலை மற்றைய சீடரான ச.நா.கந்தையாயிடம் கொடுத்து அவருக்கு அருளாசியும் வழங்கினார். அவர் தன் வாழ்நாளில் பெற்ற பெரும்பேறாக இதனைக் கருதி அதனைப் பூசித்து வந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகரத்தினம் என்னும் அன்பருக்கு நாகபூஷணி அம்பாளின் ஆலய திருவீதியில் தேரடியில் அமர்ந்து இருந்து தரிசனம் கொடுத்து அருள் ஆசியும் வழங்கினார். அவரும் பின்னாளில் அவரது சீடராகி சுவாமிகளின் திருத்தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வாறான இவரை அறிந்து உணர்ந்தவர்கள் பலர். இவரின் பக்தர்களாக இவரின் தவயோக நிலையால் கவரப்பட்டு அவரின் சீடர்களாகினர். ★

# 17ஆம் நாள் நினைவஞ்சலி



ஸ்ரீ மாவடி ஞானவயிரவர்
தேவஸ்தான ஆஸ்தான வித்துவான்
தவில் மேதை

## காமாட்சி சுந்தரம் குகாநந்தன்
## -குகன்-

அவர்கள் 04.01.2004 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்ம சாந்திக்காக ஞானவயிரவரை வணங்கி, பகவானை வேண்டிப் பணிகின்றோம்.

ஸ்ரீமாவடி ஞானவயிரவர்
தேவஸ்தானம்.

*வெள்ளாந் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (27342) (35-11-17)

# கண்ணீர் அஞ்சலி

17.01.2004 சனிக்கிழமை அன்று காலமான நாயன்மார்கட்டைச் சேர்ந்த இலங்கையின் முதலாவது இந்து மத குரு பீடாதிபதி
ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்களின் தர்மபத்தினி

## ஸ்ரீமதி செல்லம்மாள்

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 62/5, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 இல் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

பிரம்மஸ்ரீ ஹரிஹரசுத சர்மா
குடும்பத்தினர்,
ஸ்ரீ ஸபரீச ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில்.
0777-110629

*64-1¼, ஜோசப் டயஸ் லேன்,*
*கொழும்பு-15.*
*077-6047397*
*2529709, 2388222* (27336)(11-17)

## ஒரே நேரத்தில் நான்கு பேரை விசர்நாய் கடித்தது

பாடசாலைக்கு சென்ற இரு சகோதரர்கள் உட்பட நான்கு பேர் விசர்நாய களினால் கடியுண்ட சம்பவங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த யோகேந்திரன் மதுஷன் (வயது 11), யோகேந்திரன் நிரோசன் (வயது 8), சரசாலை தெற்கைச் சேர்ந்த மகேந்திரன ஜெயந்தி (வயது 34), வரணி நாவற்காட்டைச் சேர்ந்த காசிநாதன் கலையரசி (வயது 21) ஆகியோரே விசர்நாய களினால் கடியுண்டவர்களாவர்.

(எ-117)

# விற்பனைக்கு

56- LITE ACE வான்
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
தியாகராஜா கிளினிக்,
191, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
☎021 222 5058
(27348)(35)

## புதிய கணனிப் பிரிவு ஆரம்பம்:

21.01.2004 8.00a.m.
Diploma in Ms.Office

**CIIT கணனிக் கல்லூரி**
சந்நிதி வீதி, அச்சுவேலி.
(27311)(35)

# "ஞானச்சுடர்"

## சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கியோர் கவனத்துக்கு

எமது வெளியீடான மாதாந்த "ஞானச்சுடர்" சஞ்சிகைக்கு 2001, 2002, 2003 ஆகிய காலப்பகுதிகளில் ஆக்கங்கள் வழங்கியுதவிய அன்பர்கள் அனைவரும் பின்வரும் தகவல்களை எமக்கு உடனடியாகத் தந்து உதவும்வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1. முழுப் பெயர்:
2. தற்போதைய முகவரி:

- சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை
பண்பாட்டுப்பேரவை,
செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

(C/32558)(34-21-11-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவில்லும்

அமரர்
## கந்தசாமி தெட்சணாமூர்த்தி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28.05.1948 | 21.12.2003 |



அன்போடும் பண்போடும் அவனியிலே
வாழ்ந்து
இன்றோடு முப்பத்தொருநாள் ஆயிற்றே
நீமறைந்து
குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம் நெஞ்சில்
நிறைந்தவரே!
காலமெல்லாம் கண்ணீர்விட்டும்
காண்போமா உம்திருமுகத்தை.

எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்திகேட்டு உடன்வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தோருக்கும் பலவழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறுகின்ற நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளை, சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.

துன்னாலை மத்தி,
கோயிற்கடவை,
கரவெட்டி.
(27346)(34-11-17-21)

உ
கணபதி துணை

# திருமண வாழ்த்துக்கள்

*19.01.2004*



| மணமகன் | மணமகள் |
|---|---|
| திரு. கனகலிங்கம் குபேந்திரன் | திருமதி குபேந்திரன் பிரியதர்சினி |

ஆகிய இருவரும் திருமண வாழ்வில் இணைந்து நோர்வேயில் வாழ்ந்து வரும்வேளையில் ஓராண்டைப் பூர்த்திசெய்துள்ளனர். இருவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று விநாயகப்பெருமானின் அருளால் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்க வாழ்க என்று உளமார மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

- குடும்பத்தினரும். உற்றார்.
உறவினர்களும். நண்பர்களும்.

வ.முத்துலிங்கம்,
இல.64. இராமலிங்கம் வீதி.
திருநெல்வேலி கிழக்கு. திருநெல்வேலி.
(27345)(34-21-11-17)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி இசை ஆசிரியை
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

## பக்கிரிசாமி குமாரசுந்தரம்

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.
(27349) (26-17-11-21)

# துயருறுகின்றோம்

*இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி*
அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் பிரிய பத்தினியும்
*எமது ஆலயப் பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ*
சிவ.நித்தியானந்த சிவாசாரியார் அவர்களின் பிரிய மாமியாருமாகிய

## ஸ்ரீமதி செல்லம்மாள்

அவர்கள் தேகவியோகமுற்ற செய்தியறிந்து பேரதிர்ச்சியுற்றோம். அன்னையின் ஆத்ம சாந்திக்காக இலுப்பைத்தாழ்வு முருகப்பெருமானைப் பிரார்த்திப்பதோடு, அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ.க.சண்முகதாசன்
தர்மகர்த்தா
இலுப்பைத்தாழ்வு முருகன்கோயில் சங்கானை

ச.விஜயரத்தினம் குடும்பம்,
சங்கானை.(27328)(35-21-11-17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 07 - 1919 | 31 - 01 - 2003 |



## திருமதி நாகரத்தினம் சிவலிங்கம்

திதி: சதுர்த்தசி 20.01.2004

அம்மா நீங்கள் அமரத்துவம் அடைந்து
மெய்யாக ஓராண்டு மெதுவாகப் போனதுவோ!
செய்யவள் புன்னாலைக்கட்டுவன் குளத்தடி
நாச்சியம்மை முருகனை புதுப்பிக்க சென்றாயோ
உன் ஆசை நிறைவேறியது தாயே!
நொய்ய எம் உள்ளம் உமையெண்ணி ஏங்குதம்மா
வெய்ய இப்பிறவியில் மறவாதே நினைத்திருப்போம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(C/32859)(34)


600M ஆரம்ப ஸ்தானம்


**600 மீற்றர் முன்னரங்க பாதுகாப்பு வலயம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் குடாநாட்டில் தோன்றிய புதிய பாதுகாப்பு வலயம் இது. போர்க்காலத்திலல்லாது, போர் ஓய்ந்த காலத்தில் உருவான ஓர் ஆக்கிரமிப்பு வலயம். எரிகின்ற நெருப்பின் சுவாலை, அதன் அயலிலும் வெப்பத்தைப் பரப்புவது போல், குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் அகலக்கால் விரிப்பில் அதன் முன்னரங்க நிலைகளிலிருந்து 600 மீற்றர் தூரமும் சிக்கிவிட்டது. குடாநாட்டின் வடக்குத் திசையிலுள்ள சுமார் 30 மைல் நீளமான இராணுவ பாதுகாப்பு வேலியின் முன்னுள்ள 600 மீற்றர் தூரத்திற்குள் சிக்குண்டு தவிக்கும் நம் மக்களின் கதைகள் இங்கே பிரசுரமாகின்றன.**

# நிம்மதியை விழுங்கிய 600 மீற்றர்...!


மகாஜனக் கல்லூரி புதுப் பொலிவுநோக்கி

புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லத்துரை அண்ணைக்கு புதுத் தெம்பைக் கொடுத்திருந்தது. இனி தெல்லிப்பழை படைத்தளத்திற்கு அருகிலுள்ள தன் சொந்த வீட்டில் குடியமரலாம், இப்போதிருக்கும் வாடகை வீட்டைவிட்டு எழும்பச் சொல்லிவிட்டார்கள். சொந்த வீட்டுக்குப் போய்விட்டால் சோலியில்லை என்ற எண்ணத்தோடு தெல்லிப்பழைக்குப் போனார். வீட்டுச் சுவரிலே அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 'D.A-2001' குறியீட்டு இலக்கம் அவர் வீட்டுச்சுவரில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கும் சுவரிலிருந்த குறியீட்டு இலக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?

600 மீற்றர் பகுதிக்குள் இருந்து வரும் மக்கள் அடிக்கடி கூறும் முறைப்பாடுகள் பல. இவர்களின் கூற்றுகளில் உண்மை நிலை என்ன? அறியும் ஆவல் மேவிட அந்த 600 மீற்றர் வலயம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணத்தைத் தொடங்கினோம். அளவெட்டி ஊடாக இளவாலை, தெல்லிப்பழை வீதியைத் தொட்டு வலப்புறம் திரும்பி சற்றுத் தூரம் நகர்ந்ததும் கண்ணில் பட்டன அந்த சிவப்பு நிறத்திலான முக்கோணத்தகடுகள். 600 மீற்றர் எனப் பொறிக்கப்பட்ட அந்த முக்கோணத்தகடுகள் வீதியின் இருபுறமும் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றையும் 'கிளிக்' செய்துகொண்டு அப்பால் நகர்ந்து அடுத்து வந்த சந்தியில் எப்பக்கம் திரும்புவது என விழித்துக் கொண்டிருந்தபோது அந்த முதியவர் சைக்கிளில் வந்தார். முன்னாள், யாழ். அரச செயலக உத்தியோகத்தர், பெயர் எஸ்.வேலாயுதம். மெதுவாக அவரிடம் பேச்சைக்கொடுத்து விடயத்திற்கு வந்தோம். அவர் சொன்னார், "தம்பி 2002 மார்கழி 15 இற்கு பின் உருவான புதிய வலயம் தான் இது. அதற்குமுன் இப்பிடி ஒரு கட்டுப்பாடு இருக்கேல்ல. இப்ப இந்த 600 மீற்றர் வலயத்திற்குள்ள இருக்கிற வீடுகளுக்கு DA, D என இரண்டு குறியீட்டு அடையாளங்கள் இருக்கு. இதில் DA அடையாளமிடப்பட்ட வீடுகள் மீளக்குடியமரத் தடை விதிக்கப்பட்ட ஆள்களற்ற வீடுகள் D அடையாளமிட்ட வீடுகள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்களுள்ள வீடுகள் (இப்பகுதிக்குள் குடியமர்ந்துள்ள மக்கள் 600 மீற்றர் வலயக் கட்டுப்பாடு வர முன்னரே குடியமர்ந்தவர்கள் என்பதே உண்மை) இதில் DA அடையாளம் போட்ட வீடுகளில் குடியமர ஒருத்தரையும் விடினமில்லை. நான் அளவெட்டியில இருந்து இடைக்கிடை என்ர வீட்டப் பார்க்க வந்திட்டு போறனான் தம்பி" - என்று கூறிவிட்டு நகரத் தொடங்கினார் அவர்.


விவசாயி செ.குருசாமி.
'எல்லாமே தடை'

அப்பால் நகர்ந்து தெல்லிப்பழைச் சந்தி நோக்கி பயணத்தைத் தொடர்ந்தோம். வழியில் தென்பட்டார் வயோதிபரான செ.குருசாமி. தனது மாடுகளை மேய்ச்சலுக்குக் கூட்டிச் சென்றுவிட்டு மாடுகளோடு திரும்பிக் கொண்டிருந்தார். படையினரின் முன்னரங்க நிலைவரை மாடுகளைத் தான் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். மிதிவெடி பயம் இல்லையோ பயப்படாமால் போய் வாறீங்களே என்றோம். சிரித்து விட்டுச் சொன்னார். "இந்த இடங்களெல்லாம் சனங்கள் விவசாயம் செய்த இடங்கள் தம்பி. இந்த 600 மீற்றர் பிரச்சினைகுப் பிறகு இங்க பயிர் செய்ய விடுறாங்களில்லை. ஏன் பற்றைகளைக் கூட வெட்டத் தடை. பயிர் செய்யிற இடத்தில்தான்மாடுகளை மேய்ச சலுக்கு கட்டிக் கொண்டுவாறன்".


க.செல்லத்துரை
'வாழும் வழி என்ன?'

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அப்பால் சென்றபோது மிடுக்குடன் தென்பட்டது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி. உள்ளே நுழைந்தோம். அங்கே கட்டடத் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தனது பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்த அதிபர் பொ.சுந்தரலிங்கம் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துகள் இவை.

"பாடசாலைக்கு வரும் பிள்ளைகள், ஆசிரியர்கள் ஏதேனும் அவசர காரியங்களுக்காக இடைநேரத்தில் தெல்லிப்பழைச் சந்தியூடாகச் செல்ல முடியாத நிலைதான் இப்போதும் உள்ளது. பஸ் குறிப்பிட்ட பாடசாலை ஆரம்ப நேரத்திலும் முடிவு நேரத்திலும் மட்டும்தான் சேவையிலீடுபடும். அதுவும் 2 பஸ்கள் மட்டும்தான் சேவையிலீடுபடுகின்றன. ஏதாவது ஒரு சேவை தடைப்பட்டாலும கூட மாணவர்கள் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நடந்து சென்றுதான் பஸ் பிடிக்கமுடியும். ஏன், இடைநேரத்தில் மாணவர் ஒருவர் காயமடைந்தால் அல்லது சுகவீனமுற்றால கூட வைத்தியசாலைக்கு அனுப்ப வாகனம் பிடிக்க இங்கிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள அளவெட்டிக்குத்தான் செல்ல வேண்டும். என்னை அல்லது ஒரு ஆசிரி யரைச் சந்திக்க ஒருவர் வரவேண்டுமானால் தெல்லிப்பழைச் சந்தியூடாக வரமுடியாது. அளவெட்டியூடாகச் சுற்றிக்கொண்டுதான் வரவேண்டும். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள்கூட தெலலிப்பழைச் சந்தியூடாக வராதவர்கள் திடீரென அந்த வழியாகப் பயணிக்க முடியாது. பிள்ளைகள் ஏதேனும் பொருள்களை வாங்குவதற்குக்கூட ஒரு கடை கிடையாது. மாலைநேர வகுப்புகள் நடத்த முடியாது. இரவில் காவலாளி நிற்கமுடியாது. பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியில்தான் வேலை செய்கின்றோம் என்று தனது ஆதங்கங்களை முன்வைத்தார் அவர்.

அந்தப் பாடசாலை, அழுத்தங்களுக்கு மத்தியிலும் நிமிர்ந்து நிற்கிறது. அதிபருக்கு நன்றி கூறிவிட்டு பன்னாலை, வித்தகபுரம் கிராமங்களுக்குள் நுழைந்தோம். வீதி நெடுகலும் அழிந்தும், இடிந்தும் கிடக்கும் தமிழர் சொத்துக்கள்; இடையிடையே குடியிருக்கும் மக்கள்.

இந்த 600 மீற்றர் வலயத்திற்குள் சிக்கியுள்ள வித்தகபுரம பகுதியில் 16 குடும்பங்களும பன்னாலையில் சுமார் 80 குடும்பங்களும வாழ்கின்றனர்.


திருமதி ச.மகேஸ்வரி
'சமாதானத்தால் இடம்பெயர்ந்தவர்கள்'

ஆரம்பத்தில் சீருடை அணிந்த சில படைவீரர்கள் இந்த சிவப்புநிற முக்கோணத் தகடுகளை ஆங்காங்கே பொருத்தியுள்ளனர்.

ஏன் இந்தத் தகடுகள் என்று வினாவியபோது மிதிவெடி அபாயம் உள்ளபிரதேசங்களை அடையாளப்படுத்துகிறோம் என்றே கூறப்பட்டதாம். அது ஒரு ஆக்கிரமிப்பு வலயத்திற்கான ஆரம்பம என்பதை யாரும் முதலில் அறிந்திருக்கவில்லை.

வீதியில் நாம் சந்தித்த க.விஜயரட்ணம் என்ற இளைஞர் இவ்வாறு கூறுகிறார், "பகல், இரவு எனப்பல வேளைகளிலும் இப்பகுதியில் ரோந்தில் ஈடுபடுவார்கள். சிலவேளை குடும்ப அட்டைகளைப் பரிசோதிப்பார்கள். புதிய நபர்கள் எவரும் இங்கு தங்க முடியாது, உறவினர் உட்பட யார் தங்குவதானாலும் முன் அனுமதி பெறப்பட வேண்டும்."

தனது சொந்த வீட்டைப் புனரமைப்பதற்காக பொருள்களை பறித்து வைத்துவிட்டு, அனுமதிக்காக விண்ணப்பித்து அது கிடைக்காததால் சோகமே உருவாக அமர்ந்திருந்த க.செல்லத்துரை என்ற பெரியவரைச் சந்தித்தோம். நாடியில் வைத்த கையை எடுக்காது அவர் கூறிய கதை இது.

"நான் என்ர மகள், மருமகன், பேரப்பிள்ளைகளோடு இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் ஒரு வாடகை வீட்டில இருக்கிறன். வீட்டுக்காரர் தையோட எழும்பச் சொல்லிப் போட்டினம். சொந்த வீட்டில வந்து இருப்பமெண்டு கூரை போடுவதற்கு மரந்தடி, சீற்றுகள் எல்லாம் பறிச்சுப் போட்டன். ஆனால் கட்ட விடுறாங்க ளில்லை" - என்றார். அனுமதிகோரி விண்ணப்பித்திருந்த அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டபதில் கடிதமே கிடைத்தது.


விவசாயி சி.சிவஞானசம்பந்தர்
'அடிப்படை உரிமை மீறல்'

அவர் உட்பட இப்பகுதியிலுள்ள தமது வீடுகளை புனரமைக்க அல்லது மீளக்குடியமர விண்ணப்பித்த பலருக்கும் கிடைத்த பதில் இதுதான். "It is hearby informed that your request cannot be accommodated at the moment (இத்தால் அறியத்தருவது என்னவெனில், தங்களது வேண்டுகோளைத் தற்சமயம் நிறைவேற்ற முடியவில்லை.)" இவ்வாறான பதிலுக்குக் கீழ் உயாபடையதிகாரி ஒருவர் கை யொப்பமிட்டிருப்பார்.

8 மாதத்திற்கு முன் இப்பகுதியில் மீளக்குடியமர வந்த விவசாயி சி.சிவஞானசம்பந்தரை D குறியீடிட்ட ஒரு வீட்டில் குடியமர அனுமதித்திருக்கிறார்கள். தற்காலிகமாக வசித்தவர். அவரது சொந்த வீடு குடியமரத் தகுதியான நிலையிலிருந்தும் D.A குறியீடு இடப்பட்டதால் அங்கு குடியமர அவர் அனுமதிக்கப்படவில்லை. "D.A எழுத்து போட்ட ஒரே காரணத்தால் என்ர வீட்டில குடியிருக்க எனக்கு அனுமதியில்லை. இது ஒரு அடிப்படை உரிமைமீறும் செயல் எண்டு அவையோட சண்டை பிடிச்சனான். மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் S.L.M.M.இற்கும் அறிவிச்சனான், என்ன நடக்குதெண்டு பாப்பம்" என்று எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார் அவர்.

மூளாயிலிருந்து வந்து இப்பகுதியில் விவசாயம் செய்யும் வேலுப்பிள்ளை நடராசா இந்த கட்டுப்பாடுகளால் கொதித்துப் போயிருக்கிறார். வீட்டில வந்திருக்க அனுமதிகோரி விண்ணப்பித்த இவரை பண்டத்தரிப்பு முகாமில் கூப்பிட்டு விசாரித்த பின் சுன்னாகம் முகாமில் சென்று அனுமதிக் கடிதத்தைப் பெறுமாறு கூறினார்களாம். அங்கு போனால் மேலதிகாரி கையெழுத்து வைக்கவில்லை என்று அனுமதிக் கடிதம் தராது இழுத்தடித்துள்ளனர். பின்பு பலாலியிலிருந்து அனுமதி மறுத்து கடிதம் வந்ததாம் "என் வீட்டில் நான் வாழ முடியாது, என் நிலத்தில் பயிர் செய்ய எனக்குத் தடை, எங்கையோ இருந்து வந்த இவை எனக்குத் தடை விதிக்கினம்" - என்று தன் மனவேதனையை ஆக்ரோஷமாக வெளிப்படுத்தினார் நடராசா. மூளாயிலிருந்து தினமும் சைக்கிளில் வந்து இங்கு பயிர் செய்யும் இந்த விவசாயியின் நிலை பரிதாபத்திற்குரியது.

**படங்கள் : கண்ணன்**

அந்த மக்களின் வேதனைகள் மனதில் கனக்க கட்டுவன் மேற்குப் பகுதிக்குள் நுழைந்தோம். விவசாயத் தோட்டங்கள் நிறைந்த அந்தப் பாதையின் முடிவில் இருக்கிறது ஒரு வீடு. சிறுவர்கள் இருவர் முற்றத்தில விளையாடிக் கொண்டிருந்தார்கள். முன்னிருந்த கட்டடத்தில் 600 மீற்றர் என சிவப்பு எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. நாம் குரல் கொடுத்ததும் ஒரு வயதான அம்மா வந்தார், கதைத்தோம். "1998இல் இருந்து இந்த வீட்டில இருக்கிறன். இப்ப 6 மாதத்திற்கு முன் வந்து இது 600 மீற்றர் வலயம எண்டு எழும்பச் சொல்லிப் போட்டினம். எழும்பினதால எங்கட தோட்டமெல்லாம் அழிஞ்சுபோச்சு. பிறகு விதானையோடை போய் கதைச்சு, சண்டைபிடிச்சு இப்ப இருக்க அனுமதிச்சிருக்கினம். சண்டைக் காலத்தில கூட இந்த வீட்ட விட்டு நான் போகேல்ல. சமாதான காலத்தில எழும்ப வேண்டியதாப் போச்சுது. திரும்பிவந்து இருக்க நாங்கள் பட்டபாடு கொஞ்சமில்ல" என்று தன் மனவேதனையை கொட்டினார் திருமதி ச.மகேஸ்வரி.


அதிபர் பொ.சுந்தரலிங்கம்
'சுமை மிகுந்த சேவை'

இவ்வாறாக முட்கம்பி வேலிகளுக்கு முன்வாழும் இந்தக் குடும்பங்களின் வாழ்க்கை முள்மேல் வீழ்ந்த சேலையாகப் போனது வேதனைக்குரியது. எல்லோருக்கும் ஓரளவு நிம்மதியைத் தந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இவர்களது நிம்மதியைப் பறித்துவிட்டது.

ஏறத்தாழ குடாநாட்டின் வடபகுதியிலுள்ள 30 மைல் நீளமான உயர் பாதுகாப்பு முன்னரங்க வேலிகளின்முன் பயிர் செய்து வந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள், விவசாயம் செய்ய முடியாது தடுக்கப்பட்டுள்ளனர். 600மீற்றர் வலயப் பகுதிக்குள் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 19 வீடுகளின் நிர்மாணப்பணிகள் கூடத் தடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இயல்பாக வாழ அனுமதிக்கப்பட வேண்டும் - என்கிறார் யாழ். மாவட்ட செயலக உயர் நிர்வாக அதிகாரியொருவர்.

**ஆர்.மார்க் அன்ரனி**

தற்போதைய குடாநாட்டின் புதிய படைத்தளபதி நிர்வாக உயரதிகாரிகளின் சந்திப்பொன்றில் இப்பகுதிகளில் விவசாயிகள் விவசாயம் செய்யத் தான் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதற்காக நாளை புதன்கிழமை வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர், கிராம அலுவலர்களுடன் சந்திப்பொன்றையும் அவர் நடத்தவுள்ளார். எது எவ் வாறானாலும் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழும் இப்பிரதேச மக்களுக்கு நிம்மதியாக தமது வீடுகளில் வாழவும் வயல் விதைக்கவும் வழி சமைக்கப்பட வேண்டும் என் பதே அமைதியை விரும்பும் அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பு.

## வீடுகள் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

வட்டு.கிழக்கு சித்தன்கேணியில் 2ஆவது உலக இந்து மாநாட்டின ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட 10 வீடுகள் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டன.

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் செல்வராசா தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொண்டு வீடுகளைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் து.வைத்திலிங்கம், இணைப்புச் செயலாளர் பொ.தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-8-28)

## சிரமதானம்

கொடிகாமம்,ஜன.20

கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானமும் அதற்குச் செல்லும் வீதியும் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளன.

இம்மயானத்தைப் பயன்படுத்தும் கிராமத்தவர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-8-74)

## சுற்றறிக்கை கிடைத்தது

தென்மராட்சி,ஜன.20

அரச ஊழியர்களுக்கு இவ்வருடம (2004) விசேட முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்குவதற்கான சுற்றறிக்கை திணைக்கள அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2004 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் இக்கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டுமெனவும் -

இத்தொகை பத்துத் தவணைகளில வட்டியுடன் அறவிடப்படல் வேண்டுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

## பாடசாலைக்கு உபகரணங்கள்

வரணி மகாவித்தியாலயத்திற்கு கடந்த வருடம் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன என வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் மாணவர்களுக்கான 60 இரும்பு மேசை, கதிரைகளையும், ஆசிரியர்களுக்கான 10 மேசை, கதிரைகளையும் - நிக்கொட் நிறுவனத்தினர் ஆசிரியர்களுக்கான ஐந்து மேசை, கதிரைகளையும் வழங்கியிருக்கின்றனர். பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து பான்ட் வாத்தியக் கருவிகளும் வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## குண்டு வீச்சில் பலியானோர் நினைவாக நடுகல்

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சுக்களின் போது பலியான பொதுமக்களின் நினைவாக சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக ஒன்று நடுகல் நிறுவப்படவுள்ளது.

இந்த நடுகல் அமைப்பதற்கான அத்திவாரக்கல் நேற்று முன்தினம் வர்த்தகர் நமசிவாயம் சிவபாலனால் நாட்டப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகமன்ற வெள்ளிவிழாவை முன்னிட்டு இந்த நடுகல் நிறுவப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-117)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் வவுனியா புதுக்குளம் பாடசாலைக்கு 44 லட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, 33 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வந்த பெரிய கோமராசன்குளம் பாடசாலைக் கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக நிக்கொட் திட்ட அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-8-164)

## வடமராட்சி கிழக்கில் இறால் சீஷன் ஆரம்பம்

வடமராட்சி கிழக்கில் இறால் பருவம் ஆரம்பமாகியுள்ளது. இப் பகுதிக் கடலில் இக்காலத்தில் பிடிக்கப்படும் மிகப்பெரிய இறால் வெளிநாடுகளுக்கு மிக உயர்ந்த விலையில் ஏற்று மதி செய்யப்பட்டுவருகின்றது.

ஜனவரியில் இருந்து மார்ச் மாதத்திற்கு இடைப்பட்ட காலங்களில் இப் பகுதிக் கடலில் இறால் பெருமளவில் பிடிக்கப்படுவது வழமையாகும்.(எ-182)

---

## மூளாய் மேற்கு குடியேற்றத் திட்ட வீட்டு உரிமையாளர்களின் கவனத்திற்கு

மூளாய் மேற்கு குடியேற்றத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பெற்ற சேதமடைந்த அனைத்து வீடுகளையும் புனரமைப்பது சம்பந்தமான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் (22.01.2004) வியாழக்கிழமை மாலை 4.00மணிக்கு மூளாய் நாராயணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
மூளாய் மேற்கு. (27359)(26-11-17) நா.க. கூ. சங்கம்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 ~ 02 ~ 1917



உதிர்வு 31 ~ 01 ~ 2003

### அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்

(கைதடி கிழக்கு)

திதி: 20.01.2004 சதுர்த்தசி

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் பாசமும் அன்பும் எம் மனதில் நிலவிக்கொண்டேயிருக்கின்றன. தங்கள் தூய ஆத்மா சாந்திபெற்று இறைவன் திருவடியடைந்து இன்புற்றிருக்க எல்லாம் வல்ல கைதடி வீரகத்தி விநாயகனை வணங்குகின்றோம்.

மனைவி - தங்கமுத்து
மற்றும் உறவினர்.

கைதடி கிழக்கு. (27357)(35-11-17)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 14 ~ 07 ~ 1946



உதிர்வு 21 ~ 12 ~ 2003

### அமரர் சரவணமுத்து சிவானந்தம்

(குஞ்சுமணி)

எங்கள் அன்பின் குலவிளக்காய்
பாசத்தின் ஒளி விளக்காய்
எங்களை வழி நடத்திச் சென்றவரே!
நீங்கள் சென்று ஒரு திங்கள்
ஆனபோதும் வற்றவில்லை எம் கண்ணீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தும்பிக்கையான் பாதம் பணிகின்றோம்.

இன்று (20-01-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பை ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு பணவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கேரதீவு வீதி,
கோவிலாக்கண்டி,
கைதடி.

தற்காலிக முகவரி:
ஊரியான் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(27360)(35-11-17)

---

## மரண அறிவித்தல்

### செல்வி றஞ்சி யோசுவா

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி றஞ்சி யோசுவா (உடுவில், மகளிர் கல்லூரி, ஆசிரியை) நேற்று (19.01.2004) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம் யோசுவா - திருமதி செல்லம்மா யோசுவாவின் மூத்த புதல்வியும், மனோகரன் யோசுவா (கனடா), திருமதி செல்வரட்ணம், இராஜரட்ணம் (சென்னை) ஆகியோரின் அருமைச் சகோதரியும் திருமதி விஜிதா சாந்தகுமார் (கனடா), புவிதா போல்ராஜ் (கனடா), சாள்ஸ் ரட்ணராஜ் (கொழும்பு), யோசுவா செல்வராஜ் (சென்னை) ஆகியோரின் அருமைப் பெரியம்மாவும் ஜெய்சன், ஜெய்சிகா, கிறிஸ்ரின் டானியல் (கனடா), சிநேகா (சென்னை) ஆகியோரின் அருமை அம்மம்மாவும் சாந்தகுமார் போல்ராஜ் (கனடா), சர்மிலி (சுவிற்றி - சென்னை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் தென்னிந்திய திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மான்ஸ் பாடசாலை வீதி,
உடுவில். (27371)(34-11-17)

தகவல்:
திரு.திருமதி பவசிங்கம்.

---

## மரண அறிவித்தல்

### கனகசபை கணேசலிங்கம்

(ஊழியர், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கணேசலிங்கம் அவர்கள் (17.01.2004) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சறோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (ஜேர்மனி), பிறேம்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் துஷித்தா (ஜேர்மனி) அவர்களின் அருமை மாமனாரும் சாருஹி, சாரங்கி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற டாக்டர் மகாலிங்கம் மற்றும் இராசபூபதி, தியாகலிங்கம் (ஊழியர், காங்கேசன்துறை சிமெந்து ஆலை), இரத்தினபூபதி, கனகபூபதி, முத்துலிங்கம் (Greece ship) ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2004) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொல்லோலை வீதி,
உடுப்பிட்டி. T.P.060 218096. (27367) (19-11-17)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

### ஐந்தாம் ஆண்டு

மலர்வு: 1929-09-03



உதிர்வு: 1998-12-05

**அமரர் மூத்தார் சின்னத்துரை (செல்லமணி)**

(ஓய்வுபெற்ற ஊழியர் - கா.சீ.கூ)

(திதி: திருத்தியை 11-12-2003)

அன்பு அப்பாவே எங்களை வாழ
வைத்த தெய்வமே! நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
என்றும் எங்கள் நெஞ்சங்களில்
நீங்கள் அணையாத தீபம் அப்பா!

### முதலாம் ஆண்டு

மலர்வு: 1949-04-26



உதிர்வு: 2003-01-31

**திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை (சோதி)**

(திதி: சதுர்த்தசி 20-01-2004)

கண்கண்ட தெய்வமே! எம் அம்மாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
எங்களையும் சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி
உறவுகளுக்கெல்லாம் உற்ற துணையாய் இருந்து
வாழ்ந்துகாட்டி எல்லோரையும் தவிக்கவிட்டுச்
சென்று ஆண்டும் ஒன்று ஆகிவிட்டதம்மா!

இன்று எங்கள் தெய்வங்கள் இருவரதும்
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி. (2736)(30-

தற்காலிக முகவரி:
காலையடி,
பண்டத்தரிப்பு.

என்றும் எம் தெய்வங்களின்
நினைவில் வாடும்:
மகன்மார், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டு:

# ரணில் போடும் கணக்கோ வேறு!

ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான உடன்பாடு இன்று கைச்சாத்திடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியை அமைத்து ஆட்சியைக் கைப்பற்றுவதே அக்கட்சிகளின் நோக்கமாகும். ஆனால், ஆட்சியில் இருக்கும் ரணில் இந்தக் கூட்டுக் குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. எனினும், அவர் இந்தக் கூட்டுக் குறித்து ஏதோ கணக்குப் போட்டுள்ளார். கனவு காண்கிறார். தர்க்க ரீதியாக ரணில் காணும் கனவு பலிக்கும் சாத்தியம் உள்ளதாம். இது குறித்து 'லங்காதீப' நாளிதழில் உப்புல் ஜோசப் பெர்னாண்டோ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.

சந்திரிகா - ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்யமுடியாதவாறு அதைத் தடுத்துவிடக் கூடிய வழி ரணிலிடம் இருக்கும்போதிலும் எதற்காக அவர் அப்படிச் செய்யாமல் இருக்கிறார்?

இது, இன்று பலராலும் எழுப்பப்படும் கேள்வியாகும். சந்திரிகா இவ்விதம் ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தமொன்றினைச் செய்துகொள்வதை விரும்பாத வர்த்தக மற்றும் சர்வதேச சமூகங்களைப் போன்றே சிறுபான்மை இனத்தவர்கள் மட்டுமன்றி சந்திரிகாவுக்கு மிக நெருக்கமான உறவினர்களிடமிருந்தும் இக்கேள்வி எழுகின்றது. சமாதான நோக்குடைய சந்திரிகாவின் பழைய நண்பர்களுக்கும் கூட இது புரியாததொரு புதிராகவேயுள்ளது.

"ஜே.வி.பி. - பொ.ஐ. முன்னணி ஆகிய தரப்புக்களுக்கு இடையேயான கூட்டுமுயற்சியைக் கண்டு ஐ.தே.க. அஞ்சுகிறது."....

"இக்கூட்டு முயற்சியை முறியடிப்பதற்காக ஐ.தே.க.தன்னால் முடிந்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்"....

"இக்கூட்டு முயற்சியை முறியடிப்பதற்காக ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்கிவிடும்"....

"இக்கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் ஐ.தே.கவின் செல்வாக்கு நலிவடையத் தொடங்கும்."

ஜே.வி.பியினர் போன்றே இக்கூட்டு முயற்சியை ஆதரிக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது உச்சரிக்கும் மந்திரமே மேற்கூறியவையாகும்.

இந்த மந்திரங்கள் யாவும் உண்மையாக இருந்தால் ரணில் இந்த வேளையில் சந்திரிகாவுடன் எவ்வாறாயினும் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருந்திருக்க வேண்டும். வேறு ஒரு வகையில் குறிப்பிடுவதானால் ஐ.தே.கவுக்கும் பொ.ஐ.முன்னணிக்குமிடையே கூட்டு முயற்சியை உருவாக்கும் வகையில் பேச்சுக்களில் ஈடுபட்டுவந்த மனோ - மலிக் தரப்பினரின் முயற்சி வெற்றியளித்திருக்க வேண்டும்.

ஐ.தே.க. மற்றும் பொ.ஐ.மு. ஆகிய இருதரப்புக்களுக்கிடையிலான கூட்டுமுயற்சி என்னவான போதிலும், அமைச்சுப் பொறுப்புக்களைக் கைமேற்றமையால் எழுந்த சிக்கல் நிலைக்குத் தீர்வுகாணும் நோக்கத்தில் சந்திரிகா முன்வைத்த யோசனைகளைப் பிரதமர் ஏற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

"இவ்வித அரிய சந்தர்ப்பமொன்றை ரணில் ஏன் இவ்விதம் கைநழுவ விட்டார்? சந்திரிகா ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொருத்தமான வேளை இதுதான்."

"ஜே.வி.பியுடன் கூட்டுச்சேராமல் தேர்தலில் வெற்றிபெற முடியாது எனக் கூறிவரும் ஸ்ரீ.ல.சு.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒழித்து விடுவதற்காக ரணில் தற்போதைய சூழ்நிலையில் சந்திரிகாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்து கொள்ள முன்வர வேண்டும்."....

"எத்தனையோ குள்ளத்தனங்களைச் செய்துள்ள ரணில், இம்மாதிரியான குள்ளத்தனமாகச் செயற்பட்டு அரசியலில் உயர்வடைய முயற்சிக்காததேன்?

இவ்விதம் வினா எழுப்புவோரின் பேச்சிலும் உண்மை இல்லாமலில்லை. இந்தவேளையில் ரணில் சந்திரிகாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை உருவாக்கிக் கொண்டால், ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் இருக்கும் ரணிலை எதிர்க்கும் அதேநேரம் ஜே.வி.பியுடனான கூட்டு ஒப்பந்தத்தை ஆதரிக்கும் குழுவினரும் ஜே.வி.பியினரும் தடுமாற்றம் அடைவார்கள்.

ஆனால், ரணில் எத்துணை அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் கொண்டதொரு தலைவர் என்பதை அறிந்திராத காரணத்தாலேயே இவர்கள் யாவரும் இவ்விதம் கேள்வி எழுப்பியும், விமர்சித்தும் பேசி வருகின்றனர்.

ரணில் ஒருபோதும் குறுகிய நோக்குடன் செயற்படுபவரல்ல; அவரது பார்வை எப்போதும் தூரநோக்குக் கொண்டது.

"பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. கூட்டு உருவாக இடமளித்தால் அதனால் ஐ.தே.கவுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும்." ரணில் இவ்வாறு சிந்தித்திருக்கலாம். மற்றெல்லோரும்







இவ்வித கோணத்தில் சிந்திக்காத இத்தருணத்தில் ரணில் இவ்விதம் தூரநோக்குடன் புதிய கோணத்தில் சிந்திப்பதாகக் கருத இயலும்.

அவர் அவ்விதம் கருதக் காரணமென்ன? உண்மையில் ஐ.தே.கவுக்கு இப்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் சவாலாக விளங்கக் கூடியவர்கள் ஜே.வி.பியினரல்லர். ஜே.வி.பியினர் என்ன தான் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவிக்க முயன்றாலும் துள்ளிக் குதித்து மிரட்டினாலும் அவர்களால் ஐ.தே.கவுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்த முடியாது. ஏனெனில், அவர்களால் ஒருபோதும் இந்நாட்டின் அரசைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் பொறுப்பை அடைய முடியாது. ஆக மிஞ்சி மிஞ்சிப்போனால் தற்போது ஜே.வி.பி.கொண்டிருக்கும் நாடாளுமன்ற ஆசனங்களைவிட ஒரு சில ஆசனங்களைக் கூடுதலாகப்பெற முடியுமே தவிர, பெரிய எண்ணிக்கையிலான நாடாளுமன்ற ஆசனங்கள் தானும் ஜே.வி.பிக்குக் கிட்டப்போவதில்லை என்பதை ரணில் நன்கறிவார்.

அவ்விதம் ஜே.வி.பிக்கு ஒரு சில கூடுதலான நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைப்பதானாலும், அது ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆதரவாளர்களது வாக்குகளால கிடைக்க முடியுமேயல்லாது ஐ.தே.க. ஆதரவாளர்களது வாக்குகளால் கிடைக்குமெனக் கூறமுடியாது. ஐ.தே.கவின் ஆதரவாளர் எவரும் மனம் மாறினாலும் தமது வாக்கை ஜே.வி.பிக்கு வழங்கப் போவதில்லை. சுருக்கமாகக் கூறினால் ஜே.வி.பியால் ஐ.தே.கவுக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்திவிட முடியாது.

ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் அக்கட்சியின தலைவியான சந்திரிகா ஆகிய தரப்புகளால் மட்டுமே ஐ.தே.கவுக்குப் பொதுமக்களிடையேயுள்ள ஆதரவுக்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியும். எந்த வேளையிலும் ஸ்ரீ.ல.சு. கட்சியோ, சந்திரிகாவோ பொதுமக்கள் முன்சென்று தமக்கு அரசமைக்க ஆதரவு அளிக்குமாறு கோரிக்கை விடக்கூடிய தகுதி கொண்டுள்ளனர். பொதுமக்கள் ஐ.தே.கவின் நிர்வாகம் தொடர்பாக அதிருப்தி அடைவார்களாயின் நிச்சயமாக அவர்கள் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கே அரசமைக்க ஆணை வழங்க முன்வருவார்கள். அந்த வகையில் நேற்றும், இன்றும், நாளையும் ஏன் எப்போதுமே ஐ.தே.கவுக்குச் சவாலாயுள்ளது. ஸ்ரீ.ல.சு.கட்சி மட்டுமே. ஆகவேதான் ஐ.தே.க. எப்போதுமே ஸ்ரீ.ல.சு.கட்சியை நலிவடையச் செய்வதில் அக்கறை செலுத்தி வருகின்றது.

ஆனால், அவ்விதம் ஸ்ரீ.ல.சு. கட்சியை நலிவுபடுத்துவதொன்றும் ஐ.தே.கவுக்கு இலேசானதொரு விடயமாக அமையப் போவதில்லை. வரலாறே இதற்குச் சாட்சி பகர்கின்றது. முன்னர் பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சியைப் பிளவுபடுத்தி, அக்கட்சியின் முன்னணி உறுப்பினர்களைத் தம்வசம் இணைத்துக் கொண்டதன் மூலம் ஸ்ரீ.ல.சு. கட்சியை நலிவடையச் செய்ய ஐ.தே.க. மேற்கொண்ட முயற்சிகள் உரிய பலனளிக்கத் தவறியுள்ளன. 1964ஆம் ஆண்டில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான அப்போதைய ஸ்ரீ.ல.சு.கட்சியின் சபை முதல்வர் சீ.பீ.டி. சில்வாவை ஐ.தே.க. தமது தரப்பில் சேர்த்து அதன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியை நலிவடையச் செய்ய மேற்கொண்ட முயற்சி தோல்வியைத் தழுவியதைச் சகலரும் அறிவர்.

பண்டாரநாயக்க குடும்பத்தின் முடிசூடா இளவரசனான அனுரபண்டாரநாயக்காவை ஐ.தே.கவில் இணைய வைத்ததன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியை நலிவுபடுத்த ஐ.தே.க. மேற்கொண்ட முயற்சியும் தோல்வியுற்றதைச்சகலரும் அறிவர்.

ஸ்ரீ.ல.சு.கட்சிச் செயலாளராகவிருந்த எஸ்.பீ. திசநாயக்காவை ஐ.தே.கவுக்கு மாறவைத்து ஸ்ரீ.ல.சு.கட்சியை கூட்டித் துடைத்துவிட ஐ.தே.க. மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

இத்தகைய அனுபவங்களின் மூலம், ஸ்ரீ.ல.சு.கட்சியிலிருந்து அதன ஒரு சில உறுப்பினர்களை கட்சி மாற



நன்றி: டெய்லி மிரர்.

வைப்பதன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியை ஒருபோதும் நலிவடையச் செய்ய முடியாதென்பதை ரணில் தெரிந்து வைத்துள்ளார்.

அப்படியானால் ஸ்ரீ.ல.சு.கட்சியை எந்த விதத்தில் நலிவடையச் செய்ய முடியும்? என்பது ஐ.தே.கவினர் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையாகும்.

உண்மையில் அது ராஜதந்திர முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். காட்டிலுள்ள மரத்தைத் தறிப்பதற்கு அதேகாட்டு மரத்தால் உருவாக்கப்பட்ட கோடரிக் காம்பைப் பயன்படுத்துதலே அந்தத் தந்திரமாகும். வேறொரு வகையில் இதனை விவரிப்பதாயின், ஐ.தே.கவுக்கு விரோதமான சக்திகளைப் பயன்படுத்தி ஐ.தே.க.வுக்கு எதிரான முக்கிய விரோத சக்தியான ஸ்ரீ.ல.சு.கட்சியை அழித்தொழிக்கும் முயற்சி என இதனைக் குறிப்பிட முடியும். அந்த வகையில் ஸ்ரீ.ல.சு.கட்சியென்ற பெரு விருட்சத்தை அடியோடு வெட்டிச் சாய்ப்பதற்கு ரணில்பயன்படுத்தத் திட்டமிடும் கோடரிக் காம்பாக அமையப் போவது இந்த ஜே.வி.பி. அமைப்பே.

ஜே.வி.பியுடன் கூட்டுவைத்துக் கொள்வதால் ஸ்ரீ.ல.சு.கட்சி பலமடைவதற்குப் பதிலாக, நலிவடையுமென எந்த அடிப்படையைக் கொண்டு ரணில் கருதுகிறார்?

இதற்கான பதில் மிகத் தெளிவானதாகும். ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வதால், இன்று இந்நாட்டில் அரசொன்றை நிறுவுவதற்கான அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளான சர்வதேச சமூகம், வர்த்தக சமூகம் மற்றும் சிறுபான்மை இனங்கள் ஆகிய தரப்புக்களின் ஆதரவைச் ஸ்ரீ.ல.சு.கட்சி இழக்க நேரிடுமென ரணில் கருதுவதாகக் கொள்ளமுடியும். உண்மையில் மேற்கூறிய தரப்புகளின் ஆதரவை ஸ்ரீ.ல.சு.கட்சிக்குப் பெற்றுக் கொடுத்தது வேறு எவருமல்லர் சந்திரிகாவே. முன்னர் அதற்கான பின்னணியை உருவாக்கிக் கொடுத்தார். அதன் காரணமாகவே 17 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் 1994ஆம் ஆண்டில் ஸ்ரீ.ல.சு. கட்சியால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. இவ்வித வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து ஸ்ரீ.ல.சு.கட்சியை அதிகாரத்தில் அமர்த்திய சந்திரிகா குறித்தே இன்றும் ஐ.தே.கவும் ரணிலும் அஞ்ச வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் கூட சர்வதேச சமூகம், வர்த்தக சமூகம், மற்றும் சிறுபான்மை இனங்கள் ஆகிய தரப்புக்களைத் தன்பால் கவர்ந்திழுக்கக் கூடிய திறமை சந்திரிகாவுக்கு உண்டு. ஆதலாலேயே சந்திரிகாவின் அத்திறமையை ஜே.வி.பி. மூலமாகவாவது இல்லாதொழித்துவிட முடியுமென ரணில் நம்புவதாகக் கருதமுடியும்.

இன்று நம்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும், ஏன் உலகத்தின் எந்த நாட்டிலாயினும் சரி, அரசு ஒன்றை நிறுவுவதற்கான அடிப்படையான முக்கிய தேவை சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பாகும். இச்சர்வதேச சமூகங்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உட்பட்ட சர்வதேச சமூகம் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பின்பற்றும் ஜே.வி.பி. அமைப்பு கூட்டு ஏற்படுத்திக் கொள்வதை விரும்பப் போவதில்லை. அதுமட்டுமின்றி அவ்வாறானதொரு கூட்டின் மூலம் அரசொன்று உருவாக்கப்படுவதைக் காணக்கூட சர்வதேச சமூகம் விரும்பாதெனக் கருத முடியும்.

அரசொன்றை உருவாக்குவதற்கு அவசியமான மற்றொரு பின்புலம் விடுதலைப் புலிகள் அமைப்பு, மற்றும் சிறுபான்மை இனங்கள் இந்நாட்டு அரசியல் தளத்தில் வகித்துவரும் முக்கியத்துவமாகும். இவர்களது ஆதரவின்றி இந்நாட்டில் ஒருபோதும் எவராலும் ஆரோக்கியமான அரசொன்றை நிறுவமுடியாது. அரசொன்றை உருவாக்கி அதனைக் கொண்டு செல்ல வேண்டுமானால் நாட்டில் சமாதானச் சூழல் நிலவவேண்டியது அவசியமாகும். இதன்பொருட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லக் கூடிய பின்னணி உருவாக்கப்படல் அவசியமாகும்.

ஸ்ரீ.ல.சு.கட்சி இவ்விதம் இனவாத கடுங்கோட்பாட்டாளர்களான ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு அவர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ள முன்வருவர் என நம்ப முடியாது. அந்த நிலையில் சமாதானமென்பது பகற்கனவேயாகும். அதேபோன்று, எந்தவொரு அரசியல் கட்சியாலும் இந்நாட்டின் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளால் மட்டும் அரசமைக்கும் பலத்தைப் பெற்றுக்கொள்ள இயலாது என்பது யதார்த்தபூர்வமான உண்மையாகும்.

சிங்கள வாக்காளர்களின் கணிசமான வாக்குகளுடன் சிறுபான்மையின மக்களது வாக்குகளையும் பெறமுடிந்தால் மட்டுமே ஏனைய போட்டிக் கட்சிகளைப் பின்தள்ளி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அரசமைக்க முடியுமென்ற நிலையே இன்று இந்நாட்டில் காணப்படுகிறது. 1983ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரையும் ஸ்ரீ.ல.சு.கட்சி இனவாத கடுங்கோட்பாட்டாளர்களுடன் இணைந்து பொதுமக்களின் ஆதரவைக் கோரிய போதிலும், அவர்களால் அரசமைக்கத் தேவையான ஆதரவைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை. ஆனால், சந்திரிகா ஸ்ரீ.ல.சு.கட்சியில் இணைந்து கொண்டதோடு மட்டுமன்றி சிறுபான்மை சமூகத்தின் ஆதரவைப் பெறும் வகையில் இயங்கி இனவாத கடுங்கோட்பாட்டாளர்களை கட்சியிலிருந்து ஓரம் கட்ட ஆரம்பித்ததன் பின்னரே ஸ்ரீ.ல.சு. கட்சியால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. அந்த வகையில், ஸ்ரீ.ல.சு. கட்சி தற்போது மீண்டும் இனவாதக் கடுங்கோட்பாடுகளைப் பின்பற்றும் ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வதை சிறுபான்மைச் சமூகம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

**- வியெஸ்ரி -**

எனவே, விகிதாசார முறையின் கீழ் அரசொன்றை நடைமுறைப்படுத்திச் செல்ல வேண்டுமானால் அதற்கு தமிழ்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அவசியமாகும். இந்த வகையில் 1994ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரையும் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவுடனேயே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் அரசை நடத்திச் செல்ல முடிந்தது. ஆனால், ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து தகுதிகாண் அரசொன்றை உருவாக்க முயன்றதையடுத்துத் தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதுவரையில் அரசுக்குத் தாம் வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதன் காரணமாகவே அரசு பதவியிழக்க நேர்ந்தது.

எனவே, தமிழ்க் கட்சிகள் தற்போது ஜே.வி.பியினருடன் ஸ்ரீ.ல.சு.கட்சி மேற்கொள்ளவுள்ள கூட்டு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பரெனக் கருதமுடியும்.

இவை அனைத்தையும் போலவே அரசொன்றை நிறுவுவதாயின் அம் முயற்சிக்கு இந்நாட்டின் வர்த்தக சமூகத்தின் ஆதரவும் அவசியமாகும். 1994ஆம் ஆண்டில் தென்மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடையும் வரையும் இடதுசாரிகளுடன் இணைந்து அரசி

(12ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

0111WP H.K தொடர் இலக்கமுடைய TATA இனக் கென்ரர் - 450 சிவப்பு நிறம் 15000Km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. (மேற்படி வாகனம் பினான்ஸ் அடிப்படையிலானது) தொடர்புகளுக்கு 265/½, புளூமண்ட் ஸ்ரீட், கொழும்பு-13. T.P.:011 385530, 0777 666704. (27190)

பாவனையிலுள்ள லான்சர் GO தொடர் C90 யப்பான் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 2699. (27358)

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை.T.P.:0777 570279, 0777 305533. (C/32826)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் கோழிக்குஞ்சுகள் 21.01.2004 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 3529, 2867. (27292)

90% (வீதம்) முட்டை இடக்கூடிய Hylayen Brown பேட்டுக்குஞ்சுகள் வரஇருப்பதால் உங்களுக்கு தேவையான குஞ்சுகளை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும். தொடர்பு: நாசரிகாந்தன், 704, K.K.S. வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். T.P.: 222 3270. (27365)

## ஆங்கிலம்/சிங்களம்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் விடுகளுக்கு வந்து இலக்கணம் உட்பட தனிப்பட்டமுறையில் ஆங்கிலமும் சிங்களமும் கற்பிக்கப்படும். விள.இல:2138, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26814)

## தவறிவிட்டது

கோயில் தேவைக்கெனக்கொண்டு வரப்பட்ட செப்புக்குடம் 2 உருத்திராட்ச மாலைகளும் 18.01.2004 ஞாயிறன்று காலை புளியங்குளத்துக்கும், முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். M.கைலாசபதி, குற்றாலம், 43, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (27355)

## காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி மத்தி கதிரேசுபிள்ளை அவனியூவில் 8½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. அமைதியானசூழலில் ஹொட்டல், களஞ்சியசாலை போன்றவற்றிற்கு உகந்தது. தொடர்பு: சுதில்லையம்பலம்.0777-573904. (27335)

## புறொயிலர் தேவை

புறொயிலர் கோழிகள் தேவை. மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும் கிலோ 140/= தரப்படும் தொடர்பு S.குமரன், 077-6180675. (27343)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1970, பூரட்டாதி 4ஆம் பாதத்தில் பிறந்த, நிரந்தர அரச உத்தியோகத்திலுள்ள பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் கொடுக்கப்படும். வி.இல.2146, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27363)

**Net 2 Phone**

1 டொலர் **78/=**

கழிவு விலையில் பெற்றுக்கொள்ள

தொடர்பு: 17,கோவில் வீதி, யாழ். 0777 577787 (27366/35)

## காணவில்லை

கறுப்பு நிறமுடைய அல்சேசன் சுவப்பு வெள் நாயை 14.01.2004இலிருந்து காணவில்லை. பாதங்களிலும் தலையிலும் மண்ணிறமும் கட்டைவாலும் உடையதாகும். ஒருகாது மடிந்து முள்ளது. அறுவைசிகிச்சை செய்யப்பட்டதால் குட்டிபோடாது. கண்டவர்கள்

திருமதி இ.லோகநாதன்

APCஇற்கு அருகில் ஆலடி, உடுவில்.

எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (35-21-19-11) (27369)

**Russia வில் மருத்துவகல்வி (MD)**

Russiaவில் மருத்துவம் பயில அர்வமுள்ளோர் ஆலோசனைகள், அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: T.P:- 077-6248947

(35-21-11-19) (27362)


# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி...

(11ஆம் பக்கம் பார்க்க)

யல நடத்தி வந்த சந்திரிகா, வர்த்தக சமூகத்தின் ஆதரவின்றி அரசமைப்பது மட்டுமன்றி, தேர்தல் ஒன்றைக் கூட நடத்த முடியாதென்பதை உணர்ந்து கொண்டார். அதன்காரணமகவே தென்மாகாணசபைத் தேர்தலில வெற்றி பெற்றதும், வர்த்தக சமூகத்தின் ஆதரவைக் நாடிச் செல்ல வேண்டியேற்பட்டது.

இந்த வர்த்தக சமூகம் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிட்டு தமக்கும், முதலீட்டாளர்களுக்கும் சிரமங்களை உருவாக்கும் பொதுவுடமைவாதிகளான ஜே.வி.பியினருடன் ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டு ஏற்படுத்திக் கொள்வதை எந்த வகையிலும் அனுமதிக்கப்போவதில்லை.

மேற்கண்ட யாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்வேளை இக்கூட்டு முயற்சியின் விளைவாக, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச சமூகம், வர்த்தக சமூகம், சிறுபான்மை இனங்கள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் ஆகிய தரப்புக்களின் ஆதரவை ஸ்ரீ.ல.சு.கட்சி இழக்க வேண்டி ஏற்படுவதால், அக்கட்சி இந்நாட்டில் அரசமைக்கும் அதிகாரத்தை வென்றெடுக்கும் வாய்ப்பை இழக்க நேரிடுமெனவே கருதமுடியும்.

உண்மையில் இவ்வித சூழ்நிலை ஏற்படுவதையே ரணில் தற்போது எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு கிட்டக்கூடிய அரசமைக்கும் வாய்ப்பை இக்கூட்டு முயற்சியின் மூலம் அற்றுப்போய்விடச் செய்ய ஜே.வி.பி. காரணமாவதால், இக்கூட்டு முயற்சி ஐ.தே.கவுக்கு ஆசீர்வாதமாக அமையுமென ரணில் கருதக்கூடும். அப்படியானால், இக்கூட்டு முயற்சியினபலனாய் ஸ்ரீ.ல.சு.கட்சியின் நாடாளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கக் கூடுமல்லவா?

நமது சாதாரண வாழ்க்கையில் ஒன்றையும், ஒன்றையும் கூட்டினால் விடை இரண்டு என ஆகுமானாலும், அரசியலில் ஒன்றுடன் ஒன்றைக் கூட்டும்போது விடை இரண்டு என ஆகாதென்பதை ரணில் தெரிந்து வைத்திருப்பார் போலத்தோன்றுகிறது.

இவ்விரு கட்சிகளிடையே கூட்டு ஏற்படுத்தப்பட்டாலும், 2001ஆம் ஆண்டில் ஜே.வி.பிக்குக் கிடைத்த நாடாளுமன்றத் தேர்தல் மொத்த வாக்குகள், அதேயளவாவது எதிர்வரும் தேர்தலில் கிடைக்குமெனக் கூற இயலாது. 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் முதல்முதலாக வாக்களிக்கத் தகுதிபெற்ற இளம் வாக்காளர்களின் வாக்குகள் போன்றே ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு ஆதரவானவர்களின் வாக்குகளும் ஜே.வி.பிக்குக் கிடைத்தன. இளம் வாக்காளர்களைத் தமது பிரசார உத்திகளால் கவர்ந்து அவர்களின் ஆதரவைத் திரட்டுவதில் ஜே.வி.பியினர் திறமை வாய்ந்தவர்களாவர்.

ஆனால், ஐ.தே.கவின் கொள்கைகளைப் போன்றே ஸ்ரீ.ல.சு.கட்சியின் கொள்கைகளையும் விமர்சிப்பதன் மூலம் ஜே.வி.பி. தனியான பலம் வாய்ந்ததொரு மூன்றாவது தரப்பாக இயங்குவதன் மூலமே இளம் தலைமுறையினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஜே.வி.பிக்குக் கிட்டும். ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்து செயற்பட முயலும்போது ஜே.வி.பியினர் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆதரவு வாக்குகளை தமது தரப்புக்கு ஆதரவாக மாற்றுவதன் மூலம் தமது நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முடியுமேயொழிய புதிய இளம் வாக்காளர்களின் ஆதரவு அவர்களுக்குக் கிட்ட வாய்ப்பில்லை என ரணில் நம்புவதாகத் தோன்றுகிறது.

இதன் காரணமாகவே, அரசியலில் ஒன்றுடன் ஒன்றைக் கூட்டினால் அது இரண்டாகாது எனக் குறிப்பிட நேர்ந்தது. அரசியல் என்பது அந்த வகையான நிச்சயமற்றதொரு விளையாட்டாகும்.

2001ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டணிக்குக் கிடைத்த நாடாளுமன்ற ஆசனங்களை கணக்கிலெடுப்பின் 2002 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் மறக்கமுடியாததொன்றாகும். அத்தேர்தலில் இக்கூட்டணி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை அக்கூட்டணி 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை விடக் குறைவானதே. 2002ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்ற சமயம் ஐ.தே.கவே ஆட்சி அதிகாரத்தில் இருந்தமையால் அவ்வித வாக்கு வீழ்ச்சி ஏற்பட்டதாகக் காரணம் காண்பிக்கமுடியும். அவ்வித மானால், 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் கீழ்லவா இடம்பெற்றது. அவ்விதம், நோக்குவோமானால், 2002ஆம் ஆண்டு தொடர்பான வாதம் 2001ஆம் ஆண்டுக்கும் பொருந்துவதாகக் கொள்ளமுடியும். இது பற்றிப் பற்பல விதமாக விளக்கமளித்த போதிலும் அரசியலில் நேற்றுக் காணப்பட்ட நிலை இன்றைக்கும் நிலவும் எனக் கூற இயலாது.

இன்றைக்கு நிலவுகின்ற சூழ்நிலை நாளைக்கும் அவ்விதமே இருக்குமெனக் கூறமுடியாது. அந்த வகையில் தேர்தலில் போட்டியிடும் தரப்புக்களுக்கான பொதுமக்களது ஆதரவும் அந்தந்தவேளையில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றமடைவது தவிர்க்கமுடியாததே.

இன்றைய அரசியல் நிலை எவ்வாறு அமைந்துள்ள போதிலும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பி. கூட்டு முயற்சிக்குப் பின்னர் பொதுத் தேர்தலொன்று இடம்பெறுமானால் ஜே.வி.பியினருக்கு 40ஆசனங்கள் கிடைத்தாக வேண்டும்.

அந்தத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றும் வகையில் ஸ்ரீ.ல.சு.கட்சி வெற்றியடையினும் சரி, தோல்வி அடையினும் சரி குறித்த நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஜே.வி.பியினர் வசம் இருந்தாக வேண்டும். அந்த வகையில் தற்போது ஜே.வி.பி - ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. வற்புறுத்தி வருவது தேர்தலில் தாம் வெற்றி பெறுவதையோ தோல்வியுறுவதையோ நோக்கமாகக் கொண்டதல்ல. உண்மையில், ஸ்ரீ.ல.சு.கட்சி வசமுள்ள நாடாளுமன்ற ஆசனங்களில் சிலவற்றைத் தம்வசம் எடுத்துக்கொள்ளும் நோக்கிலேயேயாகும்.

இவை யாவற்றையும் ரணில் நன்கறிவார். இக்கூட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் ஸ்ரீ.ல.சு.கட்சி வென்றாலும் சரி, தோற்றாலும் சரி, ஸ்ரீ.ல.சு.கட்சி வசம் இன்றுள்ள நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைவடையுமென ரணில் நம்புவதாகத் தோன்றுகிறது. அவ்விதம், குறைவடையும் நாடாளுமன்ற ஆசனங்கள் உண்மையில் ஜே.வி.பியின் கணக்கிலே வரவு வைக்கப்படும். அப்படியானதொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சியும், தற்போதைய ஜே.வி.பியின் தரத்துக்கு சிறுபான்மைக் கட்சியொன்று போன்ற நிலைக்குத் தள்ளப்படும்.

உண்மையில் இன்று இந்நாட்டில் பெரிய அரசியல் கட்சிகள் என்றவகையில் இரண்டே இரண்டு கட்சிகளே உள்ளன. ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஐ.தே. கட்சி ஆகிய இவ்விரு கட்சிகளிலும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் மேற்கூறிய விதத்தில் சிறுபான்மைக் கட்சியாக மாற நேர்ந்தால் எஞ்சியிருக்கப் போவது ஒரேயொரு பெரிய கட்சியாக ஐ.தே. கட்சியே. சந்திரிகாவும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் சர்வதேச சமூகம், சிறுபான்மை சமூகம் மற்றும் வர்த்தக சமூகம் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள இயலாத வண்ணம் ஓரம் கட்டி சந்திரிகாவையும், ஸ்ரீ.ல.சு.கட்சியையும் ஜே.வி.பிக்குக் கட்டுப்பட்டவர்கள் போன்று ஆக்குவதன் மூலம் ஐ.தே.கவை இந்த நாட்டின் ஒரேயொரு பெரிய அரசியல் சக்தியாக நிலை நிறுத்துவதே ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமாகும்.

ரணில் போட்டுள்ள திட்டப்படி நிகழ்வுகள் இடம்பெறுமா? அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சியும் ஜே.வி.பியும் தமது கூட்டு மூலம் ரணிலை அடியோடு அரசியலை விட்டு அகற்றி, ஐ.தே.கட்சி என்ற மூன்றெழுத்துக்களையும் வரலாற்று ஏடுகளிலிருந்து அழித்து விடுவர்களா என்பதை இப்போது எவராலும் ஆரூடம் கூற இயலாது. ☆


# திருமண வைபவம் பிற்போடப்பட்டது

அன்புடையீர்!

எதிர்வரும் தை மாதம் 8ஆம் நாள் (22.01.2004) வியாழக்கிழமை நடைபெறவிருந்த

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| **உருத்திரன்** | **சிவச்செல்வி** |
| (கண்ணன்) | (செல்வி) |

ஆகியோருடைய திருமண வைபவம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். திருமணம் நடைபெறவிருக்கும் பிறிதொரு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வண்ணம்,

திரு.திருமதி சி.பேரானந்தம், காராளி வளவு, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

திரு.திருமதி செ.சின்னையா, தம்பலடி, பொலிகண்டி.

(சி-32860)(21-30-11-19)

# Direct Start 2004

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ASIAN வழங்கும் COMPUTER பாடநெறிகளும் சிறப்புக் கட்டணச் சலுகையும்**

**புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்**

விசேட கட்டணச் சலுகை 3,750/- ஜனவரி 31 மட்டுமே!

- Diploma in MS Office (DMO)
- Dip. in Computer Studies (DMO)
- Dip. in Computer Programming (DCP)
- Dip. in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)



Registered with Ministry of Tertiary & Vocational Education

- இலவச பாடநூல்கள்
- தவணைமுறை கட்டணங்கள்
- 100% செயல்முறை பயிற்சி

# ASIAN COMPUTER SYSTEMS

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677

PRASHANNAA COMPUTER STUDY CENTRE, 108, K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589

கொடிகாமம் வீதி, நெல்லியடி. (குவெட்டி தாலகந்துக்கு முன்பாக) ✆ 0777-878160

தற்பொழுது புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

## Diploma In Computer Accounting

*For University Students*

- System Analysis
- Data Processing
- Quick Book
- Pay Roll in Excel

Start On 23/01/04



பதிவுகளுக்கு:

STP Your Parner In IT Solutions.

73, Palaly Road, Kantharmadam, Jaffna T.P: 2222674



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ நடுக்கம் ☆ நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா? கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

17-01-2004 முதல் 21-01-2004 வரை

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205, T.P.: 3181, 5399

(சி-32564) (17-18)


# மரண அறிவித்தல்

## திருமதி
## விநாசித்தம்பி ராசம்மா

எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் நவிண்டிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாசித்தம்பி ராசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசிததம்பியின் மனைவியும், தங்கேஸ்வரி, ராசா, மாலா ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் சின்னராசா மதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.01.04) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக பி.ப.2 மணியளவில் எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.ரூபன் (பேரன்).
கரணவாய் வடக்கு,
நவிண்டில்.

நிரந்தர முகவரி,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

(சி-32571)(18-16-32)


## புறொயிலர் தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. கூடுதல் விலை தரப்படும்.

தொடர்பு:-
சீவா இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.


# கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
**ஆ. சிதம்பரநாதன்**
அவர்களின் அன்புத் தந்தை

## முத்தர் ஆண்டி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*காரைநகர்.*

பிரதேச செயலர்,
சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

(சி-32568)(18-16-32)

# மரண அறிவித்தல்கள்

## முத்தர் ஆண்டி
### (பொன்னம்பலம் வீதி, காரைநகர்)

காரைநகர், பென்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் ஆண்டி நேற்று (19.01.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சரவணபவா, சரோஜா, தில்லைநாதன், சிதம்பரநாதன் (சமுர்த்தி வங்கி- காரைநகர்) ஆகியோரின பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னம்பலம் வீதி,*
*காரைநகர்.*

தகவல்:
ஆ.சிதம்பரநாதன் (மகன்)
(சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர், காரைநகர்)

(சி-32567)(18-16-32)

## தம்பியப்பா தர்மலிங்கம்
### (யா/மயிலிட்டி றோ.க.பாடசாலை, இணை அதிபர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு/யாமாச்சந்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (19.01.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
செ.இராசலிங்கம்
(மாமனார்).

(27384)(18-16-32)

## செல்லப்பா ஆறுமுகம்
### (இளைப்பாறிய தபால் அதிபர்)

அரியாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்லப்பா ஆறுமுகம் (பொன்னு) 17.01.2004 லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லப்பா சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் ஓய்வு பெற்ற ஆசிரியை காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, செல்லத்துரை, கனகரத்தினம் மற்றும் சுப்பிரமணியம் பூரணம், இராசையா தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரனும் சுதர்சன், சுதாமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திவ்வியா, வாசவன் ஆகியோரின் மாமனாரும் ஜனித்தா, தரணி, யதுர்சன், தனுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2004) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

*116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திருமதி
அம்பிகா மாணிக்கவாசகர் (மருமகள்).

(27385)(18-16-32)

## வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்
### (நடத்துநர், யாழ்ப்பாணக் கல்லூரி சிற்றுண்டிச்சாலை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் நேற்று (19.01.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ப.மு.வேலுப்பிள்ளை செல்லம்மாவின் அன்பு மகனும் தனலட்சுமியின் அருமைக் கணவரும் தனுஷா, மிருணா (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற திருமதி சி.லீலாவதி, திருமதி சு.பத்மாவதி, செல்வி வே.புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி கனகம்மா நடராஜா அவர்களின் அன்பு மருமகனும் ந.பூலோகராசா, திருமதி தவமணி, ந.தவராஜா, காலஞ்சென்ற யோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டுக்கோட்டை.*

தகவல்:
தனலட்சுமி (மனைவி), மக்கள்.

(சி-32562)(18-16-32)

## திருமதி தருமரத்தினம் நாகம்மா

சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தருமரத்தினம் நாகம்மா 17.01.2004 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - திருமதி க.கண்ணகைப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற வே.தருமரத்தினத்தின் அன்பு மனைவியும் புஸ்பராணி, புவனேஸ்வரி, செல்வராசா, அன்னலஷ்மி, சாந்தநாயகி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரோகினி(UK), கோடிஸ்வரன்(Germany), விஜோதினி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வமோகன், ராஜபாசினி, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆரணி, அபிராம், ஸ்ரீராம், விஷ்ணுராம், பூமிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்,

அன்னாரது பூதவுடல் கல்கிசை மகிந்தா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்பு பி.ப.4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6/2, பெனார்டோ வீதி,*
*வெள்ளவத்தை.*
*2581277 / 2501788*

தகவல்:
திரு. திருமதி நிரஞ்சன் வினோதினி.

(27373)(18-16-32)

# கண்ணீர்ப் பூக்கள்



## செல்வி
## ரஞ்சி ஜோசுவா

(ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)

கல்வியிலே ஆசானாய்
கண்ணியமாய் வாழ்ந்தீரே
பொல்லாப்பு இல்லாமல்
பொங்கரவாய் வழிகாட்டி
நல்லோரின் மத்தியிலே
நடுநாயகமாய் விளங்கி
எல்லோரின் மத்தியிலும் - இனிய
இடம்பிடித்த செல்வியே!
எம் நினைவுகளோ உம்மைவிட்டு நீங்காது
தவிக்கின்றோம்...........


அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் பிரிவால் வருந்தும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**உடுவில் மகளிர் கல்லூரி.**

(C/32861) (26-17-16-32)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
13
09
1943



**மறைவு**
23
12
2003

## அமரர் நடராசா இரத்தினராசா
(மனேஜர்)

பண்போடும் பாசத்தோடும் பாரினிலே வாழ்ந்தீர்
இன்றோடு முப்பத்தொரு நாள் ஆயிற்றே நீர் மறைந்து
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

எதிர்வரும் (22.01.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாடசாலை வீதி,*
*ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.*

- குடும்பத்தினர்.

(27354)(18-16-32)


## வெளிவந்துவிட்டது!
## சுற்றாடல்

2004 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டம்

**தரம் 6**



ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

## BARATHY
## சித்தன்கேணி

**A/L 2005, 2006**

## பொருளியல்

S.வரதராஜன் B.A (HONS)
22-1-2004 வியாழன்
A/L 2005 - 3.30 p.m. (ப.நே)
A/L 2006 - 5.00 p.m.

(27340)(36)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந் நடித்த

(சிவ்ஸ்)

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே.)

(சி-323369) (32)

## நிறஞ்சனாஸ்

அஜித், கார்த்திக், ரோஜா நடித்த
உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

TOMB PAIDER-II

(C-32839) (32)

## லிபேட்டி அச்சுவேலி

சூரியா, வடிவேலு, விஜயகுமார், ஸ்ரீ வித்தியா
நடித்த

(ரீல்ஸ்)

தினசரி : 3.00, 7.00.

(C-32371) (32)

## நாகம்ஸ் சுன்னாகம்

கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு

விருமாண்டி

(சண்டியர்) (ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 3.00, (பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 7.30

# ஐந்து பிள்ளைகளின் தாய் கொலை; சடலம் முதலைகளுக்கு இரையானது!

## திருமலைப் பகுதியில் பரபரப்பு; அதிர்ச்சி!

கன்னியா,ஜன.20

குச்சவெளி பகுதியில் வைத்து நேற்று ஐந்து பிள்ளைகளின் தாயாரான சிவகாமி ரோகிணி அம்மா (வயது49) என்பவர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். தம்பலகாமம், சிவத்தப்பாலம் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்டு இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

இவரது சடலத்தை கொலையாளிகள் முதலைகள் நிறைந்த சிவத்தப்பால ஆற்றில் வீசி எறிந்துள்ளனர். பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்படாத போதும் அவர் அணிந்திருந்த மூக்குக்கண்ணாடி, செருப்புகள், சட்டை, கைப்பை என்பன குச்சவெளிப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவம் திருகோணமலைப் பகுதியில் பெரும் பரபரப்பினையும் அதிர்ச்சியினையும் ஏற்படுத்தியுள்ளது.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் கட்சிகளும் இவ்வைபவத்துக்கு அழைக்கப்பட்டிருக்கின்றன.

இப்புதிய கூட்டணியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் முக்கிய கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதியுடன் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, சு.க.செயலாளர் மைத்திரிபால சிறிசேன, எம்.பிக்களான சரத் அமுனுகம, நிமால் சிறிபாலடி சில்வா, ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, எம்.பிக்களான அனுரகுமார திஸநாயக்கா, விஜித ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டனர். நேற்று மாலை வரை இக்கூட்டம் நடைபெற்றது.

இம்முன்னணிக்குத் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் தவிசாளராக ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிட்ட நந்தன குணதிலகவும், தேசிய அமைப்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

முன்னணியின் செயலாளர் பதவிக்கு பெரும் போட்டி நிலவுகின்றது. ஜே.வி.பியுடனான பேச்சின் போது உடனிருந்த மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர்களது பெயர்களும் இப்பதவிக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இருந்தும் இப்பதவி ஜே.வி.பியினருக்கு வழங்கப்படவேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## ஆனந்தசங்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான முன்னாள் யாழ். மாநகரசபை பிரதிமேயர் பி.எவ்.சேவியரின் குடும்பத்தினரைச் சந்தித்துக் கவலை பரிமாறிக் கொண்டார்.

ஆனந்தசங்கரியின் வருகையையொட்டி ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டணி காரியாலயம் உட்பட அவர் செல்லும் இடங்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (ஓ-5)

## மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்ப உதவிகளின் சாதகத்தன்மை, கதையின் பின்னணியில், தெரிந்திருக்கவேண்டிய மண்ணின் வரலாறு ஆகியவை குறித்துத் தெரிந்து தேர்ந்து கொள்வதற்கே மணிவண்ணன் இப்போது இங்கு வந்திருக்கிறார்.

இதுகுறித்து மணிவண்ணன் கூறுகையில்:-

"இந்தப் படத்தில் கதையின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கக் கூடியவாறு யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கே கூடுதல் முக்கியத்துவம் வழங்க நான் எண்ணியுள்ளேன். படத்தில் செயற்கைத்தனத்தை திணிக்க நான் விரும்பவில்லை. இயல்பான நடிப்பையே நான் விரும்புகிறேன்.- என்று கூறினார்.

"ஈழத்தமிழர்கள் தொடர்பாகவும் அவர்களது போராட்டம் தொடர்பாகவும் தற்போது தமிழகத்தில் அரசியல் அதிகார நிலையில் நிலவும் கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் உங்களது இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும்?"- என்று கேட்டதற்கு-

"மனிதனின் வாழ்க்கையின் படிநிலைகளில் அவ்வப்போது வந்து போகும் உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கப்போகிறேனே தவிர, அரசியல் பேசி எனது படத்தின் மூலம் பிரசாரப்பணியாற்றப் போவதில்லை. ஆகவே, இங்கு பயம் என்பதற்கு இடமில்லை"- என்றார் அவர்.


### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்
### மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (23.01.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கப் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர். செயலாளர்.

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்



### SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்காவிலும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றவையுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP — Duration 6 Months
- DIPLOMA IN DESKTOP PUBLISHING — Duration 4 Months
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING — Duration 12 Months
- DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING — Duration 4-5 Months
- DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
- DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months
- DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
- DIPLOMA IN C — Duration 5 Months
- DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months

புதிய பிரிவு ஆரம்பம் 24.01.2004

Soft View Computer College

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

scclanka@hotmail.com
Arya Cowdar Road,
West mambalam Road
Chennai 600 033, India.
T.P: +91-44-4891286


# அமைதி முயற்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் உள்ளே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனதும் பேராசிரியர் துரைராஜாவினதும் படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன.

செயலகம் அமைக்கப்பட்டதன் பின்னர் அங்கு நடைபெற்ற முதலாவது கூட்டம் இதுவாகும். செயலகத்தை அறிமுகம் செய்வதும் அதன் பணிகள் குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்குவதும் நேற்றைய கூட்டத்தின் ஒரு நோக்கம் என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்தார்.

டென்மார்க், நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, ஜப்பான், ஜேர்மனி, பிரிட்டன், சுவீடன், சுவிற்ஸர்லாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளதும் ஐரோப்பிய ஒன்றியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம், சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி, ஆஸ்திரேலிய உதவும் அமைப்பு, கனேடிய சர்வதேச உதவி மற்றும் அபிவிருத்தி அமைப்பு, ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யுனிசெவ், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், எஸ்.டி.சி. கூட்டுத்தாபனம் ஆகிய அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தமது நாடுகளில் தடைவிதித்துள்ள அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் தூதரக அதிகாரிகள் இக கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. புலிகள் மீது தடை விதித்திருந்த போதும் பிரிட்டன் தூதரக பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். புலிகளின் பொருளாதார மூலவள ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோரும் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கென சமாதானப் பேச்சுக்கள் மூலம் அமைக்கப்பட்ட 'சிரான்' அமைப்பு செயலிழந்துவிட்ட நிலையில் மக்களுக்குத் தேவையான புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்குமாக அபிவிருத்தித் திட்டமிடல் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது என்று தமிழ்ச்செல்வன் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

மக்களின் இயல்புவாழ்வை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய திட்டங்களைச் செயலகம் அடையாளம் கண்டு தயாரித்துள்ளது என்ற விடயத்தை பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் விளக்கினார். வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புக்களும் என்னென்ன செய்யவேண்டும் என்பது குறித்து உதவும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு கூட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டது.

செயலகம் தயாரித்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைப் பெறத் தொடர்ந்தும் அவர்களுடன் இணைந்து செயற்படுவது அடுத்த கட்ட நடவடிக்கையாக இருககும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல், புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி போன்ற விடயங்களை அவசரமாகச் செய்யவேண்டியுள்ளது என்று உதவும் நாடுகளின் பிரதிநிதிக

"தென்னிலங்கை அரசியல் பிரச்சினைகளால் வடக்கு - கிழக்கு மக்களுக்கு சமாதானத்தின் பலாபலனகள கிடைக்காமல் போகக் கூடாது என்ற கருத்தை கூட்டத்தில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கொண்டிருந்ததை கூட்டத்தில் அவர்கள் பேசியபோது உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது" - என்று தயா மாஸ்ரர் தெரிவித்தார்.

கூட்டம் முடிந்த பின்னர் கருத்துத் தெரிவித்த டென்மார்க் தூதரகத்தின் பிரதித் தலைவரும் அபிவிருத்திப் பிரிவுத் தலைவருமான ஹரி ஜே.ஜே. வான் டிஜக் (Harry J.J.Van Diejk) இதே கருத்தை வெளியிட்டார்.

"வடக்கு - கிழக்கு மக்களுக்கு தேவைகள் அதிகம் உள்ளன. அரசியல் தீர்வு வரும்வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சேதங்களும் அழிவுகளும்தான் தெரிகின்றன. எனவே, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் கட்டாயமானவை. இந்த அலுவலகம் (அபிவிருத்தித் திட்டமிடல் செயலகம்) என்னென்ன செய்யப் போகின்றது என்பது பற்றி எமக்கு விளக்கியுள்ளனர்." - என்றார் அவர்.

வடக்கு - கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புத்துயிர் அளிப்பது குறித்தே கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு சர்வதேச சமூகமும் பொறுப்பு" - எனத் தெரிவித்த அவர் வடக்கு - கிழக்கை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. முக்கியமாக இந்தக் கூட்டம் நன்மையான முறையில் நடந்து முடிந்துள்ளது." - எனவும் அவர் கூறினார்.

உதவி வழங்கும் நாடுகளின் இராஜதந்திரிகளும் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டமை விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த சிறந்த அங்கீகாரம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் கே.சூரியகுமார் கூறுகையில்,

இந்த விவகாரம் குறித்து யாழ். அரச அதிபர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அறிவிக்க உள்ளோம் என்றார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்தியக் கடற்படையின் பாதுகாப்புடன் தமிழக மீனவர்கள் நுழையும் நிலை நீடித்தால், இறுக்கமான நடவடிக்கை ஒன்றை வடமராட்சி மீனவர்கள் மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் அவர் சொன்னார். (ஒ-9-173)


### எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

எங்க அண்ணா
ஜெய்
விருமாண்டி
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(27391) (22-13-16)



### புதிய வீடியோ CD வெளியீடு

எங்க அண்ணா
கமலஹாசன் நடித்த
விருமாண்டி (சண்டியர்)
பிரசாந் நடித்த ஜெய்
பிரதிகள் உடன் பெறலாம்.
பிளாஸ் சீடி ஹவுஸ்
640, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 0777-162349
(27390) (22-13-16)



### அறிவொளி
நல்லூர்

PHYSICS
A/L 2006
ஆரம்பம் : 21.01.2004
புதன் 3.30 p.m.
A/L 2005
புலங்கள், வெப்பவியல்
நடைபெறுகின்றது.
Sat., Sun. 2.30 - 4.30 p.m.
(27352) (22-16-18)


# மரண அறிவித்தல்கள்

### வேலன் கந்தையா

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் காம் றோட், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா அவர்கள் நேற்றுமுன்தினம்(18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - சின்னாச்சி ஆகியோரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும் ஜீவா (பிரான்ஸ்), ஜீரா (பிரான்ஸ்), ஜீலா(பிரான்ஸ்), ஜீதா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னையா, மகேஸ்வரி, சின்னத்தம்பி (J.P.), கனகம்மா, செல்லம்மா, பொன்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜி(பிரான்ஸ்), மதிவதனி (பிரான்ஸ்), பத்மராஜா(பிரான்ஸ்), கனகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.14, லெப்பை லேன்,*
*சோனக தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(27386) (36-16-13)

தகவல்:-
வே.சின்னத்தம்பி
(சமாதான நீதிவான்-சகோதரன்).

### முத்துக்குமாரு ஆறுமுகம்

**(இளைப்பாறிய ஆசிரியர், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்)**

அராலி வடக்கு, செட்டியார் மடத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் முத்துக்குமாரு ஆறுமுகம் நேற்று (19.01.2004) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் தில்லைநாயகி (U.S.A.), தையல்நாயகி, செந்தில்நாதன்(கனடா), மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குருசுவாமி மற்றும் தெய்வரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேந்திரன்(முகாமையாளர், வர்த்தக வங்கி, பதுளை), அருணா(பதுளை), சுரேஷ் வேணுகாந்தன் (U.S.A.), பவானி(U.S.A.), செல்வேந்திரன்(U.S.A.), அகிலன்(U.K), ஜனனி (U.K), துவாரகன(கனடா), ஆரணி(கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும் ஷயனா (U.S.A.), நயனா(U.S.A.) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியார்மடம்,*
*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.*
(32572) (36-13)

தகவல்:-
ஆ.தையல்நாயகி
(மகள்)

### துரைராஜா பேனடேட் லூர்த்தம்மா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைராஜா லூர்த்தம்மா நேற்று(19.01.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா அவர்களின் அன்பு மனைவியும் ரூபி (மீசாலை), ஜெயசீலி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா (மீசாலை), உதயகுமார்(ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோகரன், ரஞ்சினி, றெனோல்ட்(அரசு), சந்திரன், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (20.01.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுத்து பின் யாழ்.கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*197,2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(27388)(36-13-16)

தகவல்:
மனோகரன்
(சகோதரன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.